
# தொல்காப்பியர் காலம்




இரா. இளங்குமரன்

# தொல்காப்பியர் காலம்

இரா. இளங்குமரன்

**வெளியீடு**
திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி அல்லூர்
திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 620 101

# நூற்குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற் பெயர் | - | தொல்காப்பியர் காலம் |
| ஆசிரியர் | - | இரா. இளங்குமரன் |
| முதற்பதிப்பு | - | 2008 |
| அளவு | - | தெம்மி 1/8 |
| பக்கங்கள் | - | 80 |
| விலை | - | ரூ. 30/- |
| கணினி | - | கபிலர் கணிப்பொறிமையம்<br>தஞ்சாவூர். |
| அச்சு | - | தி பிரிண்டிங் ஹவுஸ்<br>திருச்சிராப்பள்ளி - 620 023.<br>தொலைப்பேசி : 2420121 |
| வெளியீடு | - | திருவள்ளுவர் தவச்சாலை<br>திருவளர்குடி (அல்லூர்)<br>திருச்சிராப்பள்ளி - 620 101. |

# பதிப்புரை

தொல்காப்பியர் காலம் உறுதி செய்யப்பட வேண்டும் என்னும் எண்ணம் தமிழறிஞர்களிடையே நெடிய காலமாகத் தோன்றி இந்நாளில் வலுவாகக் கூறவும் ஆகியுள்ளது. அதுபற்றி அறிஞர்கள் எழுத்தும் பொழிவும் ஆங்காங்கு நிகழ்ந்து வருகின்றன.

தூத்துக்குடியில் கூடிய **தமிழகப் புலவர் குழுக் கூட்டத்தில்** இக்கருத்து ஓர் ஆய்வுப் பொருளாக மேற்கொள்ளப்பட்டது. அக்கருத்தரங்கில் தொல்காப்பியர் காலம் குறித்துத் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் **மாண்பமை இ. சுந்தரமூர்த்தி** அவர்கள் தலைமையில், முதுமுனைவர் **மாண்பமை தமிழண்ணல்** அவர்களும் யானும் பொழிவு செய்தோம். அப்பொழிவை யான் முன்னரே எழுத்தாக்கியிருந்தேன். அப்பொழிவின் பின்னரும் கிடைத்த சிலகருத்துருக்களை எண்ணினேன். ஒரு சுவடியாக்கல் ஆய்வர்க்குத் தூண்டலாக அமைந்து, ஒரு துலங்கலை ஆக்க உதவுமென அச்சிட விழைந்தேன்.

தொல்காப்பியர் கால ஆய்வுக்குக் களம் அமைத்துத் தந்த தமிழகப் புலவர்குழுச் செயலாளர் முனைவர் **கு. திருமாறன்** அவர்களே, தாம் முதல்வராக இருக்கும் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரித் தாளாளரும் நிறுவனரும் ஆகிய **முதுபேரறிஞர் முதுகுன்றனார்** (பி. விருத்தாசலனார்) இயைவு விருப்பொடு, கல்லூரிக் கணினி

வழியே குறுந்தட்டாக்கி வழங்கும் முன்முயற்சி மேற்கொண்டார்; முனைவர் பேராசிரியர் தமிழகனார் மெய்ப்புப் பார்த்துதவும் பணியை மேற்கொண்டார். பின்னர் அச்சீட்டுப் பொறுப்பையும் ஏற்றார். இப்பெருமக்கள் அனைவருக்கும், குறுந்தட்டாக்கி உதவிய கணிப்பொறி வல்லார்க்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன். இந்நூல் வெளியீடு, திருச்சி மாவட்டம் திருவளர்குடி (அல்லூர்) **திருவள்ளுவர் தவச்சாலை வெளியீடாக வெளிப்படுகின்றது.** ஆய்வுலகம் போற்றி ஏற்ற அளவால் பயன் கொள்ளுமாக.

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்**

## ஆய்வு சிறக்க! அமைவு பெறுக!

**திருவள்ளுவர் காலத்தை** *அறிஞர்கள் தம் ஆய்வின் வழியே காட்டினர். அரசு, அந்நாளை ஏற்றுப்போற்றி நிலை நாட்டியது. அவ்வாறே,* **தொல்காப்பியர் காலமும்** *தீர்மானிக்கப்பட வேண்டிய கட்டாயம் உடையது. அவர் காலத்தைப் பல்வேறு அறிஞர்கள் சுட்டிச் சென்றுளர். இந்நாளிலும் ஆய்கின்றனர்.* "**ஒரு முடிபு செய்யப்பட வேண்டும்**". *அதற்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு இஃதாம்! இங்குக் காட்டப்பட்ட சான்றுகளின் மேலும், வலுவாய சான்று காட்டி நிறுவினால், அவ்வாறு நிறுவுவார் கொள்ளும் மகிழ்வினும் நிறை மகிழ்வு எளியேன் கொள்வேன். அம் முயற்சி பெருகி நன் முடிபொன்று வாய்க்குமாக! அதனை* **அரசு வள்ளுவர் நாளை ஏற்றது போல் ஏற்றுப் போற்றி நிலைப்படுத்துமாக**! *வாழிய நலனே! வாழிய நலனே!*

*இன்ப அன்புடன்,*
**இரா. இளங்குமரன்**
**26.10.2008**

# தொல்காப்பியர் காலம்

# நூற் கொடைஞர்

**'தொல்காப்பியர் காலம்'** என்னும் இந்நூலை அச்சீடு செய்த பெருமக்களைப் பற்றிப் **பதிப்புரை** பகர்கின்றது.

நூல் எழுதினாலும் பதிப்பித்தாலும் அதற்கு மூலப் பொருள் **பணம்** அல்லவோ!

பொருள் தானே, முதல் - மூலம் - பொருட்டு - அறம் - எல்லாம் எல்லாம்!

அப்பொருள் உதவிய கொடைஞர் இயல்பாகவே **தவச்சாலை அறவர், புரவலர், நூற்கொடைஞர்!** அவர்களே அன்றி, அவர்கள் குடும்பத்தவரும் இணைந்தே!

அவ்வறக் கொடைப் பெருமக்கள்

பொறிஞர் **திருமிகு க. சுப்பிரமணியனார்,** திருவரங்கம்

மருத்துவர் **திருமிகு க. கோபாலனார்,** அரும்பாவூர்

உடன்பிறந்த **'இணையர்'** இவர்.

இவர் தம் துணைவியர் தாமும் உடன் பிறந்த 'இணையர்'

**'நால்வர் வழி நல்வழி'** என

நன்றியுணர்வுடையேன்

இது, **தமிழுலகுக்கு வழங்கும்**

**தகவாம் கொடை!**

இரா. இளங்குமரன்

# தொல்காப்பியர் காலம்

*ஆசிரியர் தொல்காப்பியர், அகத்தியர் மாணவர் பன்னிருவருள் ஒருவர் என்பது நெடிய வழக்காக உள்ளது.*

**"தென்மலை இருந்த சீர்சான் முனிவரன்**
**தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த**
**துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்**
**பன்னிரு புலவரும்"**

*என்பது* **புறப்பொருள்** *விளக்கச் சிறப்புப் பாயிரம்.*

*அகத்தியர் மாணவர் தொல்காப்பியர் என்றும், அவரொடு அகத்தியரிடம் பயின்றவர் பன்னிருவர் என்றும் இப்பாயிரம் சுட்டுகிறது.* **நம்பியகப் பொருளுக்கு** *இரண்டு சிறப்புப் பாயிரங்கள் உள. ஒன்றில்,*

**"தென்மலை இருந்த இருந்தவன் இயற்றமிழ்**
**கெழீஇய அகப்பொருள் தழீஇ"**

*அகப்பொருள் நூல் இயற்றப்பட்டதாகவும், மற்றொன்றில்*

**"மலயத் திருந்த,**
**இருந்தவன் தன்பால் இயற்றமிழ் உணர்ந்த**
**புலவர்பன் னிருவருள் தலைவன் ஆகிய**
**தொல்காப் பியனருள் ஒல்காப் பெரும்பொருள்**
**அகப்பொருள் இலக்கணம் அகப்படத் தழீஇ"**

*அகப்பொருள் நூல் இயற்றப்பட்டதாகவும் குறிப்புகள் உள.*

*இவற்றால் புறப்பொருள் வெண்பாமாலை இயற்றிய ஐயனாரிதனாரும் நம்பியகப் பொருள் இயற்றிய நாற்கவிராச*

நம்பியாரும் அகத்தியர் மாணவர் தொல்காப்பியர் எனக் குறிப்பிடுகின்றனர். அகப்பொருள் பாயிரம் இரண்டுள் பின்னது, பிற்காலத்ததாகவும், தொல்காப்பியரை இணைத்ததாகவும் கருத இடம் உண்டு.

மேலும், **பன்னிருபடலம்,**

**“ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்**
**அருந்தவ முனிவன் ஆக்கிய முதல்நூல்**
**பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்**
**நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்”**

என்று கூறுகிறது.

**இறையனார் அகப்பொருள் உரை** முச்சங்க வரலாறு கூறுகின்றது. நூலில் பாயிரம் என ஒன்று இடம் பெறவில்லை. எனினும், “எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்கற்பாற்று” என்று பாயிரம் கூறி, முச்சங்க வரலாறும் கூறுகின்றது.

அதில் முதற் சங்கமிருந்தார் அகத்தியனாராகவும், இடைச் சங்கமிருந்தார் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் ஆகவும் சுட்டப் படுகின்றனர். முதற் சங்கத்தார்க்கு நூல் அகத்தியம் எனக் கூறும் அது, “இடைச்சங்கத்தார்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமும் என இவை” என்கிறது.

கடைச் சங்கத்தார்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்கிறது அது. இடைச்சங்கம் இருந்த அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், கடைச் சங்கத்து இருந்தார் அல்லர். அவர்தம் நூல்கள் இருந்தன என்பதைக் கூறுகிறது.

இவற்றால் முதலிரு சங்கங்களிலும் அகத்தியனாரும், இரண்டாம் சங்கத்தில் அகத்தியனாருடன் தொல்காப்பியனாரும் நூலாய்ந்தனர் என்றும், முதல் மூன்று சங்கங்களிலும் அகத்தியம் நூலாகவும், அகத்தியத்தொடு தொல்காப்பியமும் பின்னிரு சங்கங்களின் நூல்களாகவும் இருந்தன என்றும் அறிவிக்கிறார்.

**முச்சங்கம்**

மதுரை, கடல் கொள்ளப்பட்டதால் முதற்சங்க அழிவும், கபாடபுர அழிவால் இரண்டாம் சங்க அழிவும் ஏற்பட்ட பின் மூன்றாம் சங்கம் உத்தர மதுரையில் ஏற்பட்டதாகக் கூறுகிறார்.

இடைச் சங்கக் கபாடபுர அழிவுக்குப் பின் தொல்காப்பியர் சங்கமிருந்து தமிழாராய்ந்தாராக அவ்வுரை சொல்லாமையால், தொல்காப்பியர் காலம், இடைச் சங்கக் கபாடபுர அழிவுக் காலக் கணக்கொடு தொடர்பு கொள்ளும் அளவில் அமைகின்றது. அதாவது கடைச்சங்கக் காலத்தொடு அவர் நூலை அன்றி, அவரை இணைத்துக்காணல் ஆகாது. அக்காலத்திற்கு முற்பட்டவர் என்பதைத் தெளிவிக்கிறார்.

அவர் சொல்லும் முச்சங்கக் கால எல்லை,

**தலைச் சங்கம் இருந்த காலம் 4440 யாண்டு**
**இடைச் சங்கம் இருந்த காலம் 3700 யாண்டு**
**கடைச் சங்கம் இருந்த காலம் 1850 யாண்டு**

இவற்றைக் கூறும்போது “என்ப” “என்ப” என்றே கூறுதலால் அவர்க்கு முன் கூறியவர் கூற்றுக் கொண்டே கூறினார் இவர் என்பது விளங்கும்.

இனிச் சிலப்பதிகாரத்தின் உரைப் பாயிரத்தில் அடியார்க்கு நல்லார் இடைச் சங்க வரலாற்றைக் கூறுகின்றார்: "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய **மாகீர்த்தியாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன்** அவைக்களத்து அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழி மோசியாரும்.....என்றித் தொடக்கத்தார் ஐம்பத் தொன்பதின்மர் உள்ளிட்ட மூவாயிரத்து எழுநூற்றுவர் என்பது" அது.

இந்தக் கருத்தைப் **பழைய அகவல் ஒன்று,**

"வடுவறு காட்சி நடுவட் சங்கத்
தகத்தியர் தொல்காப் பியத்தமிழ் முனிவர்
இருந்தை யூரிற் கருங்கோழி மோசியார்"

என விரிக்கிறது.ஆண்டு 3700 என்றும் கூறுகிறது. அச்சங்கம் இருந்த காலம் அது.

### தொல்காப்பியர்

இவற்றால், இடைச் சங்கத்தும் கடைச்சங்கத்தும் நூல், தொல்காப்பியம் என்பதாயிற்று. ஆனால், தலைச் சங்கத்து அகத்தியனார் மாணவர் தொல்காப்பியர் என்னின், அவ்வகத்தியர் காலத்தவரே தொல்காப்பியர் என்பதை அல்லாமல் பின் தள்ளல் முறையாமா? கற்பித்தார் காலம் எதுவோ அதுவே, கற்றார் காலமும் ஆக வேண்டும் அல்லவோ! அகவை வேறுபாடு ஆகலாமே அன்றி, **ஆசிரியர் காலமும் மாணவர் காலமும் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும்?**

இதோ, ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறுகிறார்: "தென்திசைக்கட் போதுகின்ற அகத்தியர், கங்கையார் உழைச் சென்று காவிரியாரை வாங்கிக் கொண்டு, பின்னர் யமதக்கினியா ருழைச் சென்று அவர் மகனார் திரண தூமாக்

கினியாரை வாங்கிக் கொண்டு" வந்தார் என்கிறார். இஃதுண்மை எனின், **அகத்தியனாரைப் போலவே தொல்காப்பியனாரும் முதலூழிக் காலத்தவரே எனக் கொள்ளல் வேண்டும்.**

தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க் கினியத்தைச் செவ்விதிற் பதிப்பித்த புன்னாலைக் கட்டுவன் **சி.கணேசையர்** எழுதிய தொல்காப்பியர் வரலாறு, அவர் காலம் பற்றிக் கூறுகிறது. "சமதக்கினி புதல்வர் என்றதனாலே பரசுராமர், **தொல்காப்பியர் சகோதர ராவார்** என்பது(ம்) பெறப்படும். இராமாயணத்துள்ளே பரசுராமர் இராமரோடு போரை விரும்பிச் சென்று அவருக்குத் தோற்றதாகவும் அவருக்கு மிக முந்தினவராகவும் அறியப்படுதலினாலும் இராமராற் சீதையைத் தேடும்படி அனுப்பப்பட்ட குரங்குப் படை, இடைச் சங்க மிருந்த கபாடபுரத்தை யடைந்து சென்றதாக அறியப்படுதலினாலும், இடைச்சங்கப் புலவர்களாயிருந்தோர் அகத்தியரும் தொல்காப்பியரும் முதலாயினோர் என்று இறையனாரகப் பொருளுரை முதலியவற்றான் அறியப்படுதலினாலும் **தொல்காப்பியரும் இராமர் காலத்துக்கு மிகமுந்தியர்** என்பதும், **தொல்காப்பியரிருந்து பல்லாயிரம் ஆண்டுகள்** சென்றன என்பதும் அறியத்தக்கன.

ஆயினும், இக்காலத்துச் சரித்திர ஆராய்ச்சிக்காரருட் சிலர், **மூவாயிரம்** ஆண்டு என்றும், **ஆறாயிரம்** ஆண்டு என்றும், இப்படிப் பலவாறாகக் கூறுகின்றனர். தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்பாளர் இராவ்பகதூர் **சி.வை தாமோதரம்பிள்ளை** யவர்கள், அப்பொருளதிகாரப் பதிப்புரையில் **பன்னீராயிரம்** ஆண்டுகட்குக் குறையாதென்று கூறியிருக்கின்றனர். தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய **சுப்பிரமணியபிள்ளை** அவர்கள் கி.மு.700 ஆண்டுகளுக்குப் பிற்படாது என்கிறார். எவ்வாறு கூறினும் இவர் காலம் **12000 ஆண்டுகளுக்கு மிக முற்படும் அன்றிப்பிற்படாது**" என்பது அது.

அடியார்க்கு நல்லார், **மாகீர்த்தி**யாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் என்கிறார். நச்சினார்க்கினியர், பாண்டியன் மாகீர்த்தி என்றதுடன் அவன் **இருபத்து நாலாயிரம் ஆண்டு விற்றிருந்தான்** என்றும் கூறுகிறார்.

**விற்றிருத்தல்** என்பது ஆட்சி நடத்துதல் ஆகும். முச்சங்கக் காலம் முழுமையும் சேரினும் 9990 ஆண்டுகளேயாம்.

மாகீர்த்தியின் கால அளவும், சமதக்கினியார் மகனார் திரணதூமாக்கினியார் என்பதும் நச்சினார்க்கினியர் உரையாலேயன்றி வேறு வகையால் அறியவாராதவையாகும்.

'**கீர்த்தி**' அந்நாள் பாண்டியன் பெயராமா? '**சீர்த்தி மிகுபுகழ்**' என்பது தொல்காப்பியம். அதன் திரிபுச் சிதைவு கீர்த்தியாம்.

பரசுராமர் என்பார், இராமர்க்கு முற்றோன்றி இராமரோடு எதிரிட்டவர் என்பது கொண்டு எண்ணின், இராமாயண காலத்திற்குத் தொல்காப்பியரைக் கீழே கொண்டு வர இயலாதே.

பொய்யும் புனைவுமே வாழ்வாகிப் போன சில மதவெறியர், இராமர் 17 இலக்கம் ஆண்டுகட்கு முன் இருந்தவர் என்கின்றனர். இப்பொய்யர்க்கு நல்ல மறுமொழி, "பேரன் வயதைக் கூட்டிச் சொன்னால் பாட்டன் வயது குறைந்துவிடுமா? அப்பேரன் வயதுக் கூடுதல் போல பாட்டன் வயதும் கூடித்தானே போகும்?" என்பது. இராமனைப் பதினேழு இலக்கம் ஆண்டுகட்கு முந்தியவன் என்றால் தொல்காப்பியர் காலமும் அந்த அளவுக்குப் போகத்தானே வேண்டும்? மெய்ம்மத்தை நாடும் ஆய்வே ஆய்வாம். தொன்மம் (புராணம்) பொய்ம்மத்தின் பூச்சே என்பது உலகறி செய்தி.

**கபாடபுரம்**

**ஸ்ரீவால்மீகி முனிவரும் தென்னாடும்** என்னும் கட்டுரையில் அறிஞர் **மு.இராகவ ஐயங்கார்,** ஆந்திரம் புண்டரம் சோளம் கேரளத்தோடு கூடிய பாண்டிய நாடுகளைக் கடந்து. மலையமலையில் கதிரோனுக்கு ஒப்பாக விளங்கும் அகத்தியரைக் காண்பீர்கள் என்றும், பிறகு பொன் நிறைந்ததாயும் அழகுடைத்தாயும் முத்துமயமான மணிகளால் அலங்கரிக்கப் பட்டதாயும் பாண்டியர்க்கு யோக்கியமாயுமுள்ள கபாடத்தையும் பார்க்கக் கடவீர்கள். அதன்பின், சமுத்திரத்தை அடைந்து காரிய நிச்சயத்தைச் செய்யுங்கள் என்றும், வான்மீகியார் சீதையைத் தென்றிசைக்கண் தேடிச் செல்வாரை நோக்கிக் கூறியதாகக் கூறுகிறார்.

மேலும், கபாடபுரம் என்பது பழங்காலத்தே பாண்டிய ராஜதானியாய் இடைச்சங்க மிருந்து தமிழ் ஆராய்ச்சி செய்து வந்த நகரம் என்பதும், இக் கபாடபுரச் சங்கத்தில் தொல்காப்பியம் அரங்கேற்றப் பட்டது என்பதும் பிரசித்தம் என்கிறார்.

கவாடத்து உண்டாகும் முத்தைப்பற்றி **2200** ஆண்டுகட்கு முற்பட்ட **கௌடில்யாரும்**, தம் **அர்த்த சாத்திரத்தில்** குறிப்பிடுவதையும் "தாம்ரபர்ணிக பாண்ட்ய கவாடக சூர்ணேய" என முத்தின் வகைகளைக் குறிப்பதையும் இராகவர் உரைக்கிறார். வால்மீகி முனிவர் காலமுதல் கௌடில்யர் காலம் வரை புகழோடு விளங்கிய **கவாட முத்து,** கடல்கோளின் பின்னர்க் **கொற்கை முத்து** என ஆளப்படுதல்,

**"கொற்கையம் பெருமுத்து"** (அகநா.27)

**"முத்தின் கொற்கை"** (மதுரைக்-217)

என்பன. இக்கொற்கைமுத்து **தாலமி முதலிய** யவன ஆசிரியர்களால் சிறப்பிக்கப்படுவதாயிற்று. (1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம். பக்கம் 22, 23)

வடநாட்டுப் போர்வீரர் தலையில் பூச்சூடுதலைத் "தென்னாட்டார் போலத் தலைக்கணியாகப் பூச்சூடுகின்றனர்" என்று வால்மீகியார் கூறுவது, தமிழர் தம் அகவொழுக்கம் புறவொழுக்கங்களில் பெரிதும் இடம் பெற்று விளங்கிய பழமை விளக்கமாம். தொல்காப்பியத்தில்,

**போந்தை வேம்பே ஆரென வரூஉம்**
**மாபெருந் தானையர் மலைந்த பூவும்**

என்பதும், வெட்சித்திணை முதல் வாகைத்திணை ஈறாகப் புறத்திணையும், குறிஞ்சித்திணை முதல் பாலைத் திணை ஈறாக அகத்திணையும் பூவின் பெயரால் அமைந்தன என்பதும் சுட்டும் நம் பழைய ஆவணம் தொல்காப்பியம் தொட்டு இருத்தலால், **வான்மீகியார் காலம், இராமர் காலம், அகத்தியர் காலம், தொல்காப்பியர் காலம்** என்பனவெல்லாம் **ஒரே காலமே** எனக்கொள்ள நேரும்.

**மணலூர்**

இடைச்சங்கம் இருந்த கவாட அழிவின் பின், பாண்டியன், மணலூர் (மணவூர், மணற்புரம் எனவும் வழங்கும்) என்னும் ஊரில் தலைநகர் அமைத்தான். அக்காலம் **பாரத காலம்** என்றும், அருச்சுனன் தென்னாடு வந்து பாண்டியன் மகளை மணந்த காலம் அது என்றும் கூறுவர். அக்காலத்து அரசி ஒருத்தி ஆட்சி நடத்தியதைப் பற்றி 2300 ஆண்டு கட்குமுன், மௌரிய சந்திர குப்தனிடம் யவனநாட்டுத் தூதராக வந்த மெகசுதனிசு என்பார் "எர்குலசு என்ற பெயரிய வீரனாகிய அரசனொருவன், **பாண்டியை** என்று சொல்லப்பட்ட ஒரே மகளைப் பெற்றான். அவ்வரசன் கடல்வரையுள்ள

தென்பக்கத்து நாட்டு ஆட்சியை அவளுக்கு அளித்தான். அந்நாட்டை 365 ஊர்களாகப் பிரித்துத் தன்கீழ்ப்பட்ட சிற்றரசர்களிடம் அவற்றை ஒப்படைத்து ஒவ்வோர் ஊர்த்தலைவரும் தத்தம் திறைப்பணத்தை நாள்தோறும் அவளுக்குத் தவறாது அளித்துவரும்படி ஒழுங்கு செய்திருந்தான்" என்று கூறுகிறார் (மு.இராகவ ஐயங்கார்; ஆராய்ச்சித் தொகுதி -77).

கபாடபுர அழிவின் பின் பாண்டியன் இருந்த கடல்சார் ஊர் மணலூர். **மணற்றி**, மணற்றிடல் எனவும் வழங்கும். அம் மணற்றி பற்றிய அகக்கோவைப் பாடல்கள் இரண்டு **இறையனார் களவியலில்** மேற்கோளாக ஆளப்பட்டுள. அவை பாண்டிக் கோவை என்னும் நூல் சார்ந்தவை.

> **மணற்றி** வென்றான் கன்னி வார்துறைவாய் (42)

என்றும்,

> கடிமா **மணற்றி** மங்கை அமரட்டகோன் (178)

என்றும் சுட்டப்படுகின்றன. அம்மணற்றி என்பது யாழ்ப்பாணப் பழம் பெயரேயாம். கவாடம் போலவே கடலகம் சார் மணற்றியும் தென்னகத் தீவகப் பகுதியேயாம். ஆங்கிருந்து அகநாட்டில் அமைக்கப்பட்ட தலைநகரே மதுரை என்க.

**செய்திச் சுருக்கம்**

இது காறும் கண்ட செய்திகளின் படி, தொல்காப்பியர் காலம் பாரத காலத்திற்கு முற்பட்டதாம் இராமாயண காலத்தது என்றும், அகத்தியரும் தொல்காப்பியரும் கற்பித்தாரும் கற்றாரும் ஆவர் எனின் அவர்கள் இருவரும் ஒருகாலத்தவரே என்றும், கூறுதல் வேண்டும்.

மற்றொரு வகையால், இடையூழிக் காலத்துக் கவாடபுரத்தில் அகத்தியரொடு தொல்காப்பியர் இருந்தார் என்றும், அவர்களின் நூல்கள் அளவை நூல்களாகக் கொள்ளப் பட்டன என்றும், அவ்விடைக் கழகக் கவாட அழிவின்பின் தொல்காப்பியமும் அகத்தியமும் அளவை நூல்களாகக் கொள்ளப்பட்டன ஆயினும், அவ்விருவரும் அவையத்திருந்தார் அல்லர் என்றும் கருதின், **கவாட அழிவுக்காலம் கொண்டே தொல்காப்பியர் காலத்தின் இறுதியைக்** கணிக்க முடியும் என்றும் கொள்ளல் வேண்டும்.

**காலக்கணிப்பு**

இனிப் பாரதகாலம், இராமாயணகாலம், கபாடவூழிக் காலம் என்பவை திட்டவட்டமாகக் கணிக்கப் பட்டுள்ளவையோ எனின், துல்லியமாகச் சொல்லும் நிலை இல்லை என்பதே முடிவாம்.

பாரதப் போர்க் காலம் கி.மு.1400;கி.மு. 1500
இராமர் காலம் கி.மு. 2300; கி.மு. 1950

“பாரத யுத்த காலம், கலியுக ஆரம்பத்தை ஒட்டி, இன்றைக்கு 5000 ஆண்டுகட்டு முன்பு என்பது நூல்களில் வழங்கும் பிரபலமான வழக்காகும். இதனை நம் நாட்டிலும் பிற நாட்டிலுமுள்ள சரித்திர ஆசிரியர் பலரும் நவீன ஆராய்ச்சி முறையில் சோதித்து வருவதில் அம்மகாயுத்தம் நடந்தேறியது **இன்றைக்கு 3000 ஆண்டுகட்கு முன்** (அஃதாவது கி.மு.12-ம் நூற்றாண்டிடையில் என்று முடிவு கூறுகின்றனர்” என்கிறார் மு.இராகவஐயங்கார் (ஆராய்ச்சித் தொகுதி. பக்.88)

இராமாயண காலத்து வாழ்ந்தவர் வால்மீகியார். இராமர் மக்களோடும் சீதையோடும் ஓரிடத்து உறைந்தவர் எனப்படுவரும் அவர். ஆயினும், அவரியற்றிய இராமாயணம் கி.மு.300 என்பதும் உண்டு (பிரிட்டானிகா தகவல் களஞ்சியம்)

புத்தசாதகக் கதைகளிலேயே இராமாயணச் செய்திகள் உண்டு. அதன் காலம் கி.மு.ஐந்தாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று டாக்டர் **லேபர்** கருதுகிறார் என்கிறது வாழ்வியல் களஞ்சியம். வால்மீகி இராமாயண காலம் கி.மு.மூன்றாம் நூற்றாண்டு என்கிறது. அதே களஞ்சியம் பாரதம் இயற்றிய வியாசர் காலம் கி.மு.பதினான்காம் நூற்றாண்டு என்பர் என்கிறது. (காலக் குறிப்பு அகராதி)

**ஓர் உண்மை**

இவற்றால் நாம் அறிவது ஓர் உண்மை, **இராமாயண, பாரத காலத்தை எவரும் கி.பி.க்குக் கொண்டு வரவில்லை. கி.மு.விலேயே நின்றன.** ஆனால், **இராமாயணப் பழமையர் எனப்பட்ட தொல்காப்பியரை கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு வரை கொண்டு வந்துவிட்டனர், தமிழுக்கு அதிகாரிகள் தாங்கள் எனக் கொண்டுவிட்டவர்கள்.**

**கி.பி.யா?**

கிறித்துவிற்குப் பிற்பட்டுக் கிளர்ந்தது தொல்காப்பியம் என்பவர் பெயர்களும், அவர்கள் கண்ட ஆண்டு அடைவுகளும் வருமாறு.

பேரா. பெரிடல் கீற்று கி.பி.400ஆம் ஆண்டு
பேரா. ச.வையாபுரிப் பிள்ளை கி.பி.400-500ஆம் ஆண்டு
பேரா. நீலகண்ட சாத்திரியார் கி.பி.500ஆம் ஆண்டு
கே.என்.சிவராசப்பிள்ளை கி.பி.600ஆம் ஆண்டு

இவர்கள் காலக்கணிப்புச் செய்தார்களா, தொடுகுறி முத்துக்குறி போட்டு முடிபு செய்தார்களா? இவர்கள், கால ஆய்வுக்குக் கொண்டது இவர்கள் முடிபு செய்து கொண்ட **பின்னுக்குத் தள்ளுதல்** கொள்கை ஒன்று. மற்றொன்று, **வடசொல்லிலும் தமிழிலும் இருக்கும் சொற்கள் எல்லாமும், ஒலி ஒப்பு, கருத்து ஒப்புச் சொற்கள் எல்லாமும் வடமொழிச் சொல்லே** என

*முடிபு கொண்டுவிடுதல். அரும்பேராசிரியர் சேனாவரையர், தமிழ்ச்சொல் வடசொல்லுள் புகாது என முரட்டடி அடிக்கவில்லையா? ஐந்தெழுத்தால் ஒருபாடை என ஒரு தமிழ்ப்பிறவி (ஈசான தேசிகர் - தொல்காப்பியக்கடல்) - தமிழுக்கே பாடை கட்டவில்லையா? அப்படிப் பிறவிகளின் தொடர்ச்சியாக நாங்கள் உள்ளோம் எனத் தமக்குத் தாமே ஆவணப்படுத்திக் கொண்டவர்கள்.*

*இவர்கள் பெரிய பெரிய தமிழறிஞர்கள் அல்லரா?*

**இல்லை என எவர் சொன்னார்?**

*இவர்கள் ஆய்வுகள் பதிப்புகள் தமிழுக்கு ஆக்கமானவை என்பதைத் தவிர்க்க முடியுமா?* **தவிர்க்க வேண்டுவதுதான் என்ன?** *வையாபுரியாரின்,* **சங்க இலக்கியப் பதிப்பு, நிகண்டுப் பதிப்புகள், புறத்திரட்டுப் பதிப்பு** *இவற்றுக்கு இணையாம் பதிப்பு இதுவரை உண்டா? இந்நாள் பதிப்புலகில் வையாபுரியார் வான்மணி என விளங்குகிறார் எனத் திரு.வி.க.வினால் பாராட்டப்பட்டவர் அல்லரோ அவர்! வடமொழி முக்கால், தென்மொழி கால் எனச் செய்தது சென்னைப் பல்கலைக்கழக அகராதிப்பணி (லெக்சிகன்); அவ்வகர முதலியைப் புறந்தள்ள நினைவாராலும், புறந்தள்ள இயலாப் புகழ் உடையது அல்லவா அது!* **இவர்கள் நால்வரும் இவ்வாறே சிலச்சில வகைகளில் தேர்ந்தவர்களே!** *ஆனால் எங்கே எவ்வளவு விழிப்பாக ஆய்ந்து முடிபு செய்யவேண்டுமோ அங்கே கண்ணை மூடிக்கொண்டு காலவிளையாட்டு விளையாடி விட்டார்கள்.*

*சிலசார்புகள், கட்டிப் பிடித்துக் கச்சிதமாக ஆடவைக்கும் ஊழிக் கூத்து ஈது!*

> "சார்பு உணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
> சார்தரா சார்தரு நோய்"

என்பது எத்தகைய மெய்யியல் கோட்பாடு! இஃது அனைவர்க்கும் வாய்ப்பது இல்லையே.

**தொல் பழமை**

கலிப்பாவின் இலக்கணம், பரிபாடலின் இலக்கணம் அங்கதம் - முதுமொழி - பிசி - வண்ணம் - இவற்றின் இலக்கணம், தேவர்ப்பராஅய தேவபாணி, முப்பொருள் (முதல், கரு, உரி) ஐந்திணை, அகம் புறம், நேர்பு நிரைபு அசை, முப்பால் வகுப்பு, உரிப்பொருள் ஐந்து கொண்டே திருக்குறள் காமத்துப்பால் அமைத்துக்கொள்ளச் செய்த அருமை, கலிப்பாவைக் கொண்டே தாழிசை, துறை, விருத்தம் பெருக்கிக் கொள்ள வைத்த பெற்றிமை, குழந்தைப்பாட்டு முதலாம் சிற்றிலக்கியக் கொடை, மெய்யியல் வளம், நடுகல் விளக்கம், மரபியல் மாண்பு இன்னவை எல்லாம் **கி.பி.ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுப் பொருள்களா?** தொல்காப்பியமே ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டு என்றால், திருக்குறளின் காலம் என்ன?

**"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப"**
(தொல்.பொருள்.400)

என்ற தொல்காப்பியச் சூத்திரமும்,

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்**

என்ற திருக்குறளும் எதனை எது பின்பற்றியதென வரையறுத்துணர முடியாதபடி நம்மை மயக்குகின்றன என்கிறாரே வையாபுரியார். நல்ல மயக்கம் இல்லையா?

**பொய்யில் புலவர்**

நயன்மிக்க ஒரு செயலைச் செய்தார் **மணிமேகலைச் சாத்தனார்.**

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

*என்ற மணிமேகலை அடிகள், குறளினையும் (55) அதன் ஆசிரியரையும் தக்கவாறு போற்றிப் பாராட்டுகின்றன என்பதால் மணிமேகலைக்கு முந்தியது திருக்குறள் என ஒப்புக்கொள்ளச் செய்கின்றது.* **பாடலை அப்படியே ஆட்சிசெய்து, ஆசிரியர் பெயரையும் சுட்டிய திறம் தான் தட்டாமல் ஒப்பச் செய்துள்ளது!** *ஏன்?*

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

*என்னும் குறளின் பிழிவாகச்,*

"*செய்திகொன் றார்க்கு உய்தி இல்லென*
**அறம் பாடிற்றே**"

*என* **நூற்பெயரொடு செய்தியைச் சுட்டியும்** *அப்புறநானூற்றுப் பாடலுக்கு முற்பட்டது திருக்குறள் என* **ஒப்பமனம் வரவில்லையே** *ஆய்வாளர்களுக்கு. ஏன்? நான் பிடித்த முயலுக்கு......?*

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"

*என்னும் நற்றிணை அடிகளின் வரவு காண்பவர்க்குப்*

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

*என்னும் திருக்குறள் நினைவு தோன்றாமல் இராதே! தோன்றாமல் இருந்தால், தோன்றக் கூடாது, தோன்றவிடமாட்டோம் என்பதுதானே பொருள்?*

**வைசிகன்**

*தொல்காப்பியத்தின் மரபியலில்,*

**"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"**

*என ஒரு நூற்பா உள்ளது.*

*கட்டமைந்த நூலைக் கட்டுக்குலைக்க முனைந்தோர், ஒட்டிய ஒட்டு என்பதை, அப்பகுதியில் உள்ள நூற்பாக்களே (75-85) தம் பல்லை இளித்துக் காட்டுகின்றன! இது போதாதென்று,* **வைசிகன்** *என்னும் சொல்லோ அப்பரடிகள் நகைப்புப்போல், "விலா இறச் சிரித்திட்டேனே" எனச் செய்கின்றது.*

*வைசிகன் என்னும் சொல் பழந்தமிழ்ச் சொல்லடைவிலேயே இடம் பெறாத ஒரு சொல். தொல்காப்பியம், திருக்குறள், பாட்டு, தொகை, கீழ்க்கணக்கு, சிலம்பு, மேகலை, முத்தொள்ளாயிரம் என்பவற்றைப் பழந்தமிழ் எனக் கொண்டு செய்யப்பட்ட சொல்லடைவு (பிரெஞ்சு அகாதமி) அது. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணி என்னும் குறள் கற்றார்,* **வாணிகன்** *பெறுமே* **வாணிக** *வாழ்க்கை என்று எழுதுவாரே அன்றி, வைசிகனை இப்படி வம்புக்கு இழுப்பாரா? அதுவும்* **வைசியன்** *எனவும் தெரியாதான் வைசிகன் என ஒட்டிய பொருந்தா ஒட்டு இஃதல்லவா! எ-டு : தசமுகன் - தயமுகன். தசரதன் - தயரதன் (கம்பர்). வைகை - வையை (பரிபாடல்).*

**வைசிகனைத், தொல்காப்பியரின் நெற்றிப் பொட்டாக்கி ஆய்ந்தால், ஆய்வு முடிவு எப்படி இருக்கும்?** *முதற்கோணல் முற்றும் கோணலே!*

**தூங்குதல்**

*திருவள்ளுவர் பற்றி இட்டுக் கட்டிய கதையில், பொட்டுக் கட்டிய பாட்டு ஒன்று உண்டு!*

**"அடிசிற் கினியாளே அன்புடை யாளே**
**படிசொற் கடவாத பாவாய் - அடிவருடிப்**
**பின்தூங்கி முன்னுணரும் பேதாய் உனைப்பிரிந்தால்**
**என்தூங்கும் என்கண் எனக்கு?"**

*என்பது அது,* **தூங்கும்** *என்னும் சொல் உறங்கும் என்னும் பொருள் கொண்டது பிற்காலம். அச் சொல்லைப் பயன் படுத்தியுள்ளார் திருவள்ளுவர். ஆதலால், அவர் பிற்காலத்தவர் என்பது ஆய்வாகுமா?*

*திருவள்ளுவர்,*

**"தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க**
**தூங்காது செய்யும் வினை"**

*என்பதை உறங்குதல் பொருளிலா ஆட்சி செய்தார்? அமைந்து செயல், விரைந்து செயல் பற்றியவை அல்லவோ இவை?*

**"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலனாள் பவர்க்கு"**

*என்றும் கூறினார். இது, சோர்வில்லாமை - மடியின்மைப் பொருள் தருவது அல்லவோ!* **சான்றாகாததைச் சான்றாக்கி ஆய்ந்து முடிபு செய்தல் சால்பாகாதே!**

**ஓரை**

*ஓர், ஓரி என்பவை இருவகை வழக்கிலும் இன்றுவரை வழங்குவன. ஓரி-ஒப்பற்ற வீரன், ஒப்பற்ற அவ்வீரன் குதிரை; ஓரி - ஒற்றைக் குரங்கு, ஒற்றை யானை, ஒற்றை விளையாட்டுக்காய்!* **ஓரை,** *ஒன்றுபட்ட நாள் கோள்; ஓரை -*

ஒத்த பெண்பாலர் கூடியாடும் விளையாட்டு! எ-டு: ஓரையாயம்! தொல்காப்பியர் **ஓரையும் நாளும்** என வழங்குவது கொண்டு, ஓரை என்பது ஹோரா என்னும் **கிரேக்கச்** சொல், வடமொழிக்கண் வந்து தமிழில் ஆயது என்பது சொல்லியல் அறிந்தார் சொல்லும் சொல் என எவர் கொள்வார்? ஏன், வேற்றுச் சொல், எனின், தமிழில் பொருளற்ற விரிவாக்க வேரும் விளக்கமும் அற்ற - சொல்லாக அல்லவோ இருக்கும்?

'**ஓர்**மனம்' என்பது ஒருவர் பெயர்! "முதுவாய் ஓரி முழவாக" "அணிநிற **ஓரி** பாய்தலின் திணிநெடுங்குன்றம் தேன்சொரியும்மே" என்பவை பழந்தமிழ் இலக்கிய ஆட்சிகள். ஓர்மை, ஒருப்பட்ட தன்மை "ஒருமை மகளிர்" - வள்ளுவம்.

**சங்கம்**

இறையனார் களவியல் முச்சங்க வரலாறு கூறுகின்றது. அடியார்க்கு நல்லாரும் நச்சினார்க்கினியரும் நாவுக்கரசரும் (நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி) பிறரும் கூறும் **சங்கம்** என்னும் ஆட்சி, கி.பி.470 இல் தொடங்கப்பட்ட **வச்சிர நந்தியின்** திரமிள சங்கமே என்று கூறி, சங்கம் என்பது அக்காலத்துக்குப் பின்னை ஆட்சி என்று வெற்றிப் புன்னகை பூக்கின்றனர்! அவர்களுக்கு, ஒத்த ஒலிச் சொல் கண்டால் **வடக்கே தாவும் நிலை** இருந்தும், புத்தர் கண்ட மும்மணிகளுள் ஒன்றான **சங்கம் சரணம் கச்சாமி** ஏன் தோன்றவில்லை? தோன்றினால் புத்தர் காலச் சார்பு தோன்றிவிடுமோ? அது கி.மு. ஆறாம் நூற்றாண்டு அல்லவோ!

**அவையம்**

கூடல், புணர், புணர்ப்பு, புணர் கூட்டு, அவையம், துறை, தொகை, மன்று, பொதியில் என்பனவெல்லாம் **தமிழாய்ந்த – தமிழரங்கேறிய – அவையங்களின்** பெயர் என்பதை அறியாதவர்களா கி.பி. எனப் பின்னுக்குத் தள்ளுவோர்.

*அவையம், பண்டிதர் கூட்டம் என்று பொருள் தருகிறது செ.ப.க. அகராதி! மற்றைச் சொற்களைக் கண்டு கொள்ளவில்லை அது. கூடல் என்பது புலவர்களின் கூட்டம் ஆய்வு அரங்கேற்றம் ஆயவகையால் ஏற்பட்ட பெயர்தானே! முகில்கள் கூடி அழிக்க வந்ததாம் புனைவுவழிப் பெயரா கூடல்?*

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை"

*எனத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறுவது அவன் புரவாண்மைச் சீர்மை அல்லவா!*

**மூவேந்தர்**

"போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர்"

*என மூவேந்தரைக் குறித்தலால் தொல்காப்பியம் காலத்தால் மிகப் பிற்பட்டது என்கிறார்* **சிவராசர்.** *இதனைச் சுட்டும்* **கே.கே.பிள்ளை** *அவர்கள், "இம்முடிபு வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு முற்றிலும் முரண்பாடானதாகும். காத்தியாயனர் கி.மு.நான்காம் நூற்றாண்டிலேயே சோழரைப் பற்றியும் பாண்டியரைப் பற்றியும் எழுதியுள்ளார். இந்த மன்னரைப் பற்றிய குறிப்புகள் ஹதீகும்பாக் கல்வெட்டு களிலும் (கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி) வருகின்றன. எனவே தொல்காப்பியர் தம் நூலில் அம்மூன்று மன்னரையும் குறிப்பிடுவதில் வியப்பேதுமில்லை" என்கிறார் (தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும் பக்.99).*

புறநானூற்றின் கடவுள் வாழ்த்தை அடுத்த முதற்பாட்டே,

> "அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
> நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
> ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
> பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!"

எனச் **சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை** முரஞ்சியூர் முடிநாகனார் பாடிய பாடல். சிவராசர் அறியாமல் இராரே! கொடுத்தோய் என்றும் பொருந என்றும் "நடுக்கின்றி நிலீ இயரோ அத்தை" என்றும் முன்னிலைப்படுத்திக் கூறுவதை அறியாமல் இராரே! **பாரத காலம் கி.பி.ஆறாம் நூற்றாண்டா?**

பழங்குடி என்னும் திருக்குறள் ஆட்சிக்கு, "தொன்று தொட்டுவருகின்ற குடியின்கட் பிறந்தார்" என உரை எழுதி, "தொன்று தொட்டு வருதல் சேர,சோழ, பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டுவருதல்", எனப் பரிமேலழகர் விளக்கம் எழுதியதை நினைப்பின் புறம் தள்ள இயலாதாம்.

தொல்பழந் தமிழ்மண்ணில், இம் மூவேந்தர் பெயரை அல்லாமல், எவர் பெயரை, எவர் ஆட்சியைக் கேட்க முடிந்தது?

புறநானூற்றில் தலைச்சங்கத்தார் பாட்டும் உண்டு என்பார், மறைமலையடிகளார்! முரஞ்சியூர் முடிநாகர், தலைச்சங்கப் புலவருள் முதற்கண் குறிப்பிடப்படுவார் ஆவர்.

**களவியல் உரை**

இனி, இறையனார் களவியல் உரையின் நம்பகத் தன்மையை நாம் அறிதல் வேண்டும். பின்னே தள்ளிப் பார்த்தல்

எப்படி முறையற்றதோ, அதே முறையற்றதுதானே, விருப்பம் போல் முன்னே தள்ளுவதும்?

"மதுரை ஆலவாயிற் பெருமான் அடிகளால் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரைகண்டு, குமாரசாமியாற் கேட்கப் பட்டது என்க. இனி, உரை நடந்துவந்தவாறு சொல்லுதும்".

"மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங் கொற்றனார்க்கு உரைத்தார்.

அவர், தேனூர் கிழார்க்கு உரைத்தார்
அவர், படியங் கொற்றனார்க்கு உரைத்தார்.

அவர், செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார்

அவர், மணலூராசிரியர் புளியங்காய்ப் பெருஞ் சேந்தனார்க்கு உரைத்தார்.

அவர், செல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெருங்குமரனார்க்கு உரைத்தார்.

அவர், திருக்குன்றத்து ஆசிரியர்க்கு உரைத்தார்
அவர், மாதளவனார் இளநாகர்க்கு உரைத்தார்
அவர், முசிறியாசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார்
இங்ஙனம் வருகின்றது உரை" என்பது.

நக்கீரனார் முதல் நீலகண்டனார் வரை, உரைத்த உரையை எழுதினார் எவர்?

**இத்தனைபேர்கள் அச்சுவார்ப்படமென ஒப்பித்து வந்து இறுதியில் ஒருவர் எழுதினால் முதலாமவர் உரைத்த உரை, படிமாறாமல் எழுத்துப்படி – இருக்குமா?**

போர்க்களத்தில் நின்று சங்கம் முரசு ஆயவை முழங்கிய பின்னர்ப் 'படை எடுக்க மாட்டேன்' என நின்ற பார்த்தனைப் பதினெட்டு நாள் போர்க்குக் கிளர்ச்சியுண்டாக்கப், பதினெட்டு மடலம் உரைத்தானாம் கண்ணன்! கீதைப்பேருரை அதுவாம்!

கண்ணன் உரைத்தான்; அதனை அவன் எழுதினான் அல்லன்;
பார்த்தன் கேட்டான்; அவனும் எழுதினான் அல்லன்;
சஞ்சயன் கேட்டான்; அவனும் எழுதினான் அல்லன்;
திருதராட்டிரனும் கேட்டான்; அவனும் எழுதினான் அல்லன்;
அன்றியும், பார்வையும் இல்லான்!
அப்படியானால் எவன் எழுதினான்?
**எவனோ எழுதினான்!** அது, **கண்ண பெருமான் சட்டை மாட்டிக் கொண்டது!**
**இதற்கும், களவியல் உரை நடந்துவந்ததற்கும் என்ன வேறுபாடு?**

எவரோ நூல்செய்து எவர் தலையிலோ கட்டுகிறார் உண்மை இதுவே!

இறையனார், களவியலுக்கு வீறுமிக்க நடையில் உரைபெறும் பேறு நமக்கு எய்தினும், அதன் வரவுப் புனைவு ஒப்புமாறு இல்லை! அதனால், அப்படி அப்படியே, சங்கம் இருந்த காலம், புலவர் எண்ணிக்கை, கவியரங்கேறிய காவலர் எண்ணிக்கை என்பன வெல்லாம் கொள்ளத் தக்கனவாக இல்லை. அதன் வழிப்பட்டதே அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் முதலோர் குறிப்பிடும் செய்திகளும்.

என்ன வியப்பு! நூலாசிரியர் பெயர் இறையனார்! அவரை, இறைவனார் ஆக்கிவிட்டனரே! இறையன் - இறைவன் வேறுபாடுமா தெரியவில்லை?

**காலம் கண்டறிய வழி**

*இனி, இவற்றைக் கொள்ளாமல் தள்ளினால், தொல்காப்பியர் காலத்தைக் கண்டறிய வழி என்ன?*

**வழிகள் இரண்டு : ஒன்று, நூலில் கிடைக்கும் அகச்சான்று. மற்றொன்று, அகச்சான்றாகக் கொள்ளக் கூடியவற்றுக்கு வாய்க்கும் புறச்சான்று.** *இவ்விரண்டன் வழியாகவே தீர்மானிக்க வேண்டும். தொல்காப்பியரைக் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை இறக்கிய ஆய்வுகளைத் தள்ளுபடி செய்த நாம், கி.மு.பகுதியில் தொல்காப்பியரை ஏற்றியவர்கள் பெயர்களையும் அவர்கள் கண்டுரைத்த காலத்தையும் அறிவோம்:*

*தெ.பொ.மீனாட்சிசுந்தரனார். கிறித்துவுக்கு முற்பட்டது எனலாம்.*

| | |
|---|---|
| *பி.டி.சீனிவாச ஐயங்கார்* | *கி.மு.100 முதல் 200* |
| *இரா. இராகவ ஐயங்கார்* | *கி.மு.145* |
| *கே.சி.சங்கர ஐயர்* | *கி.மு. 300* |
| *ந.சி.கந்தையா பிள்ளை* | *கி.மு.350* |
| *எம்.சீனிவாச ஐயங்கார்* | *கி.மு. 350; 400* |
| *கே.கே.பிள்ளை* | *கி.மு.400* |
| *மு.வரதராசனார்* | *கி.மு.500* |
| *வி.ஆர்.இராமச்சந்திரதீட்சிதர்* | *கி.மு.500* |
| *ஞா. தேவநேயப் பாவாணர்* | *கி.மு.700* |
| *சி. இலக்குவனார்* | *கி.மு.700* |
| *ச.சோ.பாரதியார்* | *கி.மு.1000* |
| *கா.சுப்பிரமணிய பிள்ளை* | *கி.மு.2000* |
| *மறைமலையடிகள்* | *கி.மு.3500* |
| *க.வெள்ளை வாரணனார்* | *கி.மு.5320* |

*இவ்வனைவர் ஆய்வையும், அவர் கூறுவதைச் சுருக்கி உரைக்கினும் பெருக்கமாம் என்பதால், கீழெல்லை*

சுட்டியவருள் ஒருவராம் இரா.இராகவ ஐயங்கார் குறிப்பையும், மேலெல்லை சுட்டியவராம் வெள்ளைவாரணர் குறிப்பையும் காணலாம்.

நச்சினார்க்கினியர், தொல்காப்பியர் நூல் செய்தது ஆதியூழியின் அந்தத்தே என்கிறார்.

அடியார்க்கு நல்லார், குமரியாறு கடல் கொள்ளப் பட்டதற்கு முன்னே நிலந்தரு திருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்தி இரீஇனான் என்கிறார்.

பேராசிரியர், சகரர் வேள்விக் குதிரை நாடித் தொட்ட கடலகத்துப்பட்டுக் குமரியாறும் பனைநாட்டோடு கெடுவதற்கு முன்னையது என்கிறார்.

களவியலுரைகாரர், இடைச்சங்க மிருந்தார் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் எனவுரைத்து அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத் தென்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது என்கிறார்.

இவ்வுரையாளருள் நச்சினார்க்கினியர் நீங்கலாக மற்றை மூவரும் குமரியாறு கடல் கொண்டதற்கு முன்னரே தொல்காப்பியம் அரங்கேறிற்றென்று உடன்படுகின்றனர். பாண்டி நாட்டைக் கடல்கொண்ட காலம் கி.மு.145 என்பது இலங்கைப் பௌத்த சரித்திரங்களைக் கொண்டு ஆராய்ந்து துணியப்பட்டது. இதனால், தொல்காப்பியர் கி.மு.145-க்குச் சிறிது முற்பட்டவரேயாவர் என்பது தெளியலாம் என்கிறார் இரா.இராகவ ஐயங்கார். (தமிழ் வரலாறு : பக். 257-258)

திருக்குறள், சங்க இலக்கியங்கள், பாரதப்போர், பாணினியம் ஆகிய இவற்றுக் கெல்லாம் முற்பட்டது தொல்காப்பியர் எனப் பல்வேறு சான்றுகளால் விரியக் கூறும் **வெள்ளைவாரணர்** "பாண்டிய மன்னர்கள் கல்வி வளர்ச்சி

குறித்து மூன்று முறை தமிழ்ச் சங்கங்களை நிறுவித் தமிழ் வளர்த்த வரலாறு, இறையனார் களவியலுரையினுள்ளே விரித்துக் கூறப் பெற்றது. தென்மதுரை நிறுவப்பெற்ற முதற்சங்கம் 4440 ஆண்டுகளும், கபாடபுரத்தில் நிறுவப் பெற்ற இடைச்சங்கம் 3700 ஆண்டுகளும், இப்பொழுதுள்ள மதுரையாகிய கூடல் நகரத்தில் நிறுவப்பெற்ற கடைச்சங்கம் 1850 ஆண்டுகளும் நிலை பெற்றிருந்தன எனக் களவியலுரை கூறுகின்றது.

களவியல் கூறும் இக்கொள்கையினைப் பின்வந்த உரையாசிரியர் எல்லாரும் உடன்பட்டு ஏற்றுக் கொண்டுள்ளார்கள். கடைச்சங்கம் கி.பி.230-க்குள் முடிந்துவிட்டதென்பது ஆராய்ச்சியாளர் துணிபாகும். இக்குறிப்பின்படி நோக்கினால் தலைச் சங்கம் இற்றைக்கு 11716 ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது புலப்படும். தொல்காப்பியனார் தலைச்சங்கத் திறுதியிலும் இடைச்சங்கத்துத் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் என்பது முன்னர்க் குறிக்கப்பட்டது. களவியல் உரைகாரர் கண்ட ஆண்டுக் கணக்கின்படி நோக்கினால் இடைச்சங்கம் கி.மு.5320 இல் தொடங்கியதெனக் கொள்ளலாம். எனவே, ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்தின் மேலெல்லை கி.மு.5320 என்பது தெளிவாதல் காணலாம்” என்கிறார். (தமிழிலக்கிய வரலாறு தொல்காப்பியம் பக் : 105). மேலும், “தொல்காப்பியர் பாணினி காலத்திற்கு முற்பட்டவர்; பாரத காலத்துக்கும் முற்பட்டவர்; பாரதகாலம் கி.மு.ஆயிரத்தைந் நூறாண்டுகளுக்கு முன்னது; ஆதலால், கி.மு.5320 தொல்காப்பிய மேலெல்லை என்றதே சரி” என்றும் கூறுகிறார் (மேற்படி பக்.117)

**மேலாய்வு**

முச்சங்க வரலாறு கொண்டு முடிவு செய்வது என்றால், அகத்தியரே தொல்காப்பியரை அழைத்துவந்தார்; அவர் மாணவருள் ஒருவராகத் தொல்காப்பியர் பயின்றார்; ஆதியூழியின் அந்தத்தே தொல்காப்பிய நூலை இயற்றினார் என்பன வெல்லாம் எண்ணி அகத்தியர் காலம் - இராமாயண காலம் - தொல்காப்பியர் காலம் எனத் தனித்தனியே கொள்ள வேண்டாமல், எல்லாமும் ஒருகால எல்லைப் பரப்பினவாய் இருக்கும். இந்நிலையில், இராமாயண காலமும் இன்னது எனத் தெளிவு கொள்ள முடியா நிலையிலேயே பன்முகம் காட்டிக் கொண்டுள்ளது! பாரத காலம் முந்தியது; இராமாயண காலம் பிந்தியது என்பாரும் உளர்!

தமிழ் இலக்கியப் பெரும்பரப்பாகிய பாட்டு, தொகைகளிலோ, அகத்திய வழிநூல் எனப்படும் தொல்காப்பியத்திலோ **அகத்தியரைப் பற்றி எந்தவொரு குறிப்பும் இல்லை.** அவரைப் பற்றி அறிய வாய்ப்பதெல்லாம், மணிமேகலை தொட்டும், அதன் பின்னதான நூல்களிலுமேயாம்! மருத்துவ நூல்கள் எண்ணற்றுச் சொல்லப்படுவன உள எனினும் அவையெல்லாம் மிகப் பிற்பட்டவை. கம்பர் இராமாயணம், திருவிளையாடல், கோயில் பற்றிய தொன்மங்கள் (புராணங்கள்) ஆகியன புனைவு வழிப்பட்டவை! பேரகத்தியத் திரட்டு என்பதோ அகத்தியர் பெயரால், முத்துவீரிய ஆசிரியர்க்குப் பின்னிருந்த ஒருவர், முத்துவீரிய இலக்கணத்தை முன்னேடாக வைத்துக்கொண்டு, வேண்டுமாறெல்லாம் வடசொற்களைப் பெருக்கிவைத்த போலிமையானது. ஆதலால், நாம் வேறு வகையிலேதான் தொல்காப்பியர் ஆய்வைத் தொடரவேண்டும். அம்முறையும் முன்னை ஆய்வாளர்கள் கொண்டதே அல்லாமல் புதுவது அன்றாம். **அம் முறை, வாய்த்தசான்று கொண்டு, அதன் மேலே படிப்படியே கொண்டு செல்லும் நெறியாம்.**

**சான்றுகொண்டு மேற்செலல்!**

சிலப்பதிகாரம் திருக்குறளை அப்படியே ஆள்கிறது. இது,

> **"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்**
> **தெய்வம் தொழுதகை திண்ணிதால்" (23 : வெண்பா)**

என்றும்,

> **"முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு**
> **பிற்பகல் காண்குறூஉம் பெற்றியகாண்" (21:3-4)**

என்றும் வருவனவற்றாலும் பிறவற்றாலும் புலப்படும்.

இத்தொடர் கொண்டு, திருவள்ளுவர் பயன் படுத்தியிருக்கக் கூடுமே என்பாரும் உளர். அதற்கு மணிமேகலை மெய்ச்சான்று காட்டி வள்ளுவம் முற்பட்டது என்பதை நிறுவுகிறது. அது, திருக்குறளை ஆள்வதுடன் நூற்பெயர் சுட்டித் திருவள்ளுவர் பெயரும் சுட்டி விளக்கும் அருமையைக் கண்டுளோம். ஈண்டும் காண்க.

> **"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்**
> **பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்**
> **பொய்யில் புலவன் பொருளுரை"**

என்கிறது. அச்சு மாறாவடிவும், **பொய்யில் புலவன்** என்னும் பெயரும் கிடைத்தற்கரிய சான்றுகள் ஆகின்றன. முன்னரே கண்ட இதனைத் தேவை கருதியே மீளப்பார்க்கிறோம்! கூறியது கூறல் அன்று!

மணிமேகலை ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், சேர அடிகள் இளங்கோவுக்கு உழுவல் அன்பர். சிலப்பதிகாரக் காவியம் இயற்றத் தூண்டியவர்; அவர்க்குச் சிலப்பதிகார மதுரை நிகழ்வுகளைப்பட்டாங்கு

உரைத்தவர்; நூல் நிறைவுற்று அரங்கேறிய காலத்தும் இருந்தவர். ஆதலால், மேகலை சிலம்பு ஆகிய காப்பியங்கள் பிரிவறியா ஒருமையில், இரட்டைக் காப்பியங்கள் என ஆட்சிகொண்டன. சிலப்பதிகார நூற்கட்டுரை,

> **"மணிமே கலைமேல் உரைப்பொருள் முற்றிய**
> **சிலப்பதி காரம் முற்றும்"**

என்றே முடிகின்றது.

சிலப்பதிகார நிறைவாகிய வரந்தரு காதையில் இடம் பெறும் வேந்தருள் ஒருவன், "கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்" என்பான் (30:160) அவன் உரைபெறு கட்டுரையில், "கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்ட முந்துறுத்தாங்கு, அரந்தை கெடுத்து வரந்தரும் இவளென ஆடித்திங்கள் அகவையின் ஆங்கோர் பாடிவிழாக்கோள் பன்முறை எடுப்ப மழைவீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று" என்று குறிக்கப் படுகிறான்.

இக்கயவாகுவின் காலம் கி.பி.174-196 ஆகும். இவ்வேந்தன் இலங்கை வரலாறு கூறும் மகாவம்சத்து இடம் பெற்றவன் ஆவன்.

இம்மணிமேகலை, சிலம்புச் செய்திகள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின என்பதும், இக்காலத்திற்கு முற்பட்டது திருக்குறள் என்பதும் தெளிவுபடும் செய்திகளாம். ஆதலால், திருக்குறளைக் கி.பி.இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நூலாகக் கொள்ளல் அன்றிப் பிற்பட்ட நூலாகத் தள்ளல் ஆகாது என உறுதி செய்யலாம்.

முதற்றமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம். அதற்கு முற்பட்டவை தனித்தனிப் பாடல்களாகப் பாடப்பட்ட

தொகை நூற்காலம். பத்துப்பாட்டில் நெடியது மதுரைக் காஞ்சி. 782 அடிகளைக் கொண்டது. எனினும் தனிப்பாடலேயாம். பதிற்றுப் பத்து, பத்தன் தொகுதி எனினும் தனித்தனிப் பாடல்களே! நூறன் தொகுதியாம் ஐங்குறுநூறும், தனித்தனிப் பாடல்களே! இத்தொகைக் காலத்து நூல்களுள் ஒன்றான புறநானூற்றில் மணிமேகலை நூல் சுட்டியவாறே ஒரு திருக்குறள், அதன் பெயர்களுள் தலைசிறந்த அறம் என்னும் பெயருடன் இடம் பெற்றுளது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை ஆலத்தூர் கிழார் பாடியபாட்டு (34) அது,

**"நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்**
**செய்திகொன்றோர்க் குய்தி இல்லென**
**அறம்பா டிற்றே"**

என்பது, இங்கே குறிக்கப்படும் குறள், திருக்குறளைக் கற்றார் எவர்க்கும் பளிச்செனப்படுவதாம்!

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு**

என்பது அக்குறள் (110)

**அறம்** என்னும் நூற்பெயர், திருக்குறளை அன்றி வேறு எந்நூலையும் சுட்டுவது இல்லை! அறத்துப்பாலால் மட்டும் கொண்ட பெயரன்று அது! பொருள் நெறியாலும் அறம்! போர் நெறியாலும் அறம்; காதல் முதலாம் வாழ்வியல் நெறியாலும் அறம் பேசும் நூல் அஃதாதலின், நூற்பெயரே அறம் ஆயிற்றாம்.

ஆதலால், திருக்குறள் தொகை நூல்களாலும் மேற்கோளாக ஆளப்பட்ட பழமையுடையதாம்.

**"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்"**

என்னும் **நற்றிணை** எக்குறளை ஏற்றுப்பாடியது என்பது எவர்க்கும் வெளிப்பட விளங்குவதே.

"உண்டால் அம்மஇவ் வுலகம்" எனத் தொடங்கும் கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதியார் பாடிய புறப்பாடல் (182), எக்குறளின் விரிவாக்கம் என்பதும் இருநூல்களையும் கற்றார்க்கு இனிது விளங்குவதேயாம். இவை,

> **"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**
> **நாகரிகம் வேண்டு பவர்"**

> **"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்**
> **மண்புக்கு மாய்வது மன்"**

என்னும் குறள்கள் என்பதை விளக்கவேண்டுவது இல்லை.

இக்குறிப்பால், **நாம் அறியவேண்டுவது திருக்குறள் காப்பிய நூல்களுக்கு முற்பட்டது மட்டுமன்றித் தொகைநூல் பாடல்களும் மேற்கோளாகக் கொள்ளும் முன்மை உடையது என்பதாம்.**

புறநானூற்றின் முதற்பாடல் பாடிய முரஞ்சியூர் முடிநாகர். முதற்சங்கத்தவர் எனப்படுவார். அவர், பாரத நிகழ்வில் பங்குகொண்டு இருதிறப் படையர்க்கும் போர்க்காலமெல்லாம் உணவு வழங்கிய பெருமையன் ஆகிய பெருஞ் சோற்று உதியஞ் சேரலாதனைப் பாடியுள்ளார். அத்தகு பாடல்கள் சில வள்ளுவர்க்கு முற்பட்டவை ஆகலாம். தொகைப் பாடல்கள் அனைத்துக்கும் பிற்பட்டதன்று திருக்குறள் என்பதைக் குறிப்பதற்குச் சொல்லப்பட்டது இதுவாம்.

இனித், தொல்காப்பியம் திருக்குறளுக்கு முற்பட்டது என்பதற்கு எள்ளத்தனை ஐயமும் இல்லாதிருக்க, ஐயுறும் அறிஞர்கள் இருந்தனர் என்பது. முன்னரே காணப்பட்டது.

**மந்திரம்** என்பதன் இலக்கணம்,

> **"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
> **மறைமொழி தானே மந்திரம் என்ப"**

எனத் தமக்கு முந்தையர் கொண்ட தொல்பழமுறையை ஆசிரியர் தொல்காப்பியர் எடுத்துரைத்தார் என்பதை,

> **"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
> **மறைமொழி காட்டி விடும்"**

என்னும் குறள் வழியதே எனக் கூறுவார். எப்படி ஏற்பார்?

> **"அறம் முதலாகிய மும்முதற் பொருள்"**

என்று முக்கூறுபட்ட வாழ்வியலைத் தமிழர் நெறிப்படி வகுத்துக்காட்டி ஆணை ஆக்கியவர் தொல்காப்பியர் (செய்.105). வேறொரு வகையாம் இன்பியல் நோக்கிலே ஆய்வார்க்கு.

> **"இன்பமும் பொருளும் அறமும் என்றாங்கு**
> **அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்"**

என்றவரும் அவர் (களவியல் -1).

இந்நெறியிலே முப்பால் ஆக்கியவர் திருவள்ளுவர். தொல்காப்பியர் குறுவெண்பாட்டு என்று கூறிய குறள்யாப்பையே தம் நூல் யாப்பாகக் கொண்டவர் திருவள்ளுவர். வெண்பா யாப்பின் முதன்மை குறுவெண்பா ஆதலால், அதனை மேற்கொண்டு பாடிய திருவள்ளுவர் முதற்பாவலர் எனப்பட்டதும் எண்ணத்தக்கது. **குறுவெண்பாட்டு** என்பதன் தொகைச் சொல்லே **குறள்** என்பது தெளிவானது.

> **"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்**
> **மென்மை யும்என் றிவைவிளங்கத் தோன்றிக்**

**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப".**

என்னும் முதுமொழி இலக்கணம் முற்றிலும் முப்பாலுக்கு ஒத்திருத்தலை உணர்ந்த பின்னைப் புலமையர் திருக்குறளை முதுமொழி எனப் பெயரீடு செய்து, குறளை விளக்கும் வகையில் தாம் இயற்றிய நூல்களுக்கு **முதுமொழிமேல் வைப்பு, வள்ளுவர் முதுமொழி** எனப் பெயரிட்டு வழங்கினர்.

திருக்குறள், கடவுள் வாழ்த்தில் கடவுள், வாழ்த்து என்னும் சொற்கள் இடம் பெறவில்லை. தொல்காப்பியர் வழங்கிய வழக்குநோக்கியது அது.

**"கொடிநிலை, கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"**

என்று வரன்முறைப்படுத்தித் தொல்காப்பியர் வைத்த முறையையே முறையாய்க் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் எனப் பாயிரமாய் வைத்துப் பாடியவர் திருவள்ளுவர்.

கொடி = மின்னற்கொடி என்பது சிலப்பதிகாரம். கந்து-கட்டு; அழி-அழிப்பது. கட்டற்றது அல்லது பற்றற்றது. வள்=கொடை. வள்ளியோர்ப்படர்ந்து என்பது புறம். வள்ளியாவது அறப்பயன்; அதனை வலியுறுத்துதல்.

**"உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து**
**வள்ளியம் என்னும் செருக்கு"**

என்பது வள்ளுவம். 'வள்ளலார்' என்னும் பெயரின்பேறு அறிக.

இனி, "இன்பம் என்பது எல்லா உயிர்க்கும்" என்பது தொல்காப்பியம். மக்கள் எய்தும் இன்பச் சுரப்பு அதன் வளர்வு

விளைவு என்பவை கண்டு இட்டது **காமம்** என்னும் சொல். அது, கமம் - காமம் ஆயது.

'கமம் நிறைந்து இயலும்' என்பது தொல்காப்பியம். வளர்பிறை படிப்படியே வளர்ந்து முழுமதி ஆவது ஒப்பது காமம் திருக்குறளில் காமம் என்னும் சொல் 39 இடங்களில் உண்டு. ஈரிடங்களில் மட்டும் இன்பம் உண்டு! ஆங்கும் காமமும் உண்டு!

**"காமப் பகுதி கடவுளும் வரையார்"**

**"காமம் சான்ற கடைக்கோட் காலை"**

என்பன தொல்காப்பியம்.

தொல்காப்பியர் கூறும் உரிப்பொருள்களைக் கொண்டே காமத்துப்பாலைப் படைக்கின்றார் திருவள்ளுவர்.

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்பவை தொல்காப்பியர் வைத்த உரிப்பொருள் வைப்பு முறை. அம்முறையே முறையாய் ஒவ்வோர் உரிப்பொருளுக்கும், ஒவ்வோர் ஐந்து அதிகாரமாய், ஐந்து உரிப்பொருள்களுக்கும் 25 அதிகாரங்கள் பாடிக் காமத்துப்பால் படைத்தவர் திருவள்ளுவர். காண்க.

அ. 109. தகையணங்குறுத்தல்
110. குறிப்பறிதல்
111. **புணர்ச்சி மகிழ்தல்**
112. நலம் புனைந்துரைத்தல்
113. காதற் சிறப்புரைத்தல்

இவை, **புணர்தல்** என்னும் உரிப்பொருளும் அதன் சார்பும்.

ஆ 114. நாணுத்துறவு உரைத்தல்
115. அலர் அறிவுறுத்தல்

*116.* **பிரிவாற்றாமை**
*117.* படர்மெலிந்து இரங்கல்
*118.* கண்விதுப்பு அழிதல்

இவை, **பிரிதல்** என்னும் உரிப்பொருளும் அதன் சார்பும்.

இ. *119.* பசப்புறு பருவரல்
*120.* தனிப்படர் மிகுதி
*121.* **நினைந்தவர் புலம்பல்**
*122.* கனவு நிலை உரைத்தல்
*123.* பொழுதுகண்டு இரங்கல்

இவை, **இருத்தல்** என்னும் உரிப்பொருளும் அதன் சார்பும்.

ஈ. *124.* உறுப்பு நலன் அழிதல்
*125.* நெஞ்சொடு கிளத்தல்
*126.* **நிறையழிதல்**
*127.* அவர்வயின் விரும்பல்
*128.* குறிப்பறிவுறுத்தல்

இவை, **இரங்கல்** என்னும் உரிப்பொருளும் அதன் சார்பும்.

உ. *129.* புணர்ச்சி விதும்பல்
*130.* நெஞ்சொடு புலத்தல்
*131.* **புலவி**
*132.* புலவி நுணுக்கம்
*133.* ஊடலுவகை

இவை, **ஊடல்** என்னும் உரிப்பொருளும் அதன் சார்பும்.

ஐந்தைந்து அதிகாரங்களுள்ளும் **இடையே நிற்கும் அதிகாரம் உரிப்பொருள் பெயரொடும் ஒன்றியே நிற்றல்** காண்க.

இவ்வாறெல்லாம் தொல்காப்பியர் வழியில் நூல் யாத்தவர் திருவள்ளுவர். தொல்காப்பியர் அகப்பொருளின்

உயிர்ப்பாகக் கொண்ட உரிப்பொருளையே தம் யாப்பியலுக்கு ஏற்ப வள்ளுவர் அமைத்துக் கொண்ட திறம் அருமைமிக்க தாம்!

**"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலை முறைசிறந் தனவே**
**பாடலுட் பயின்றவை நாடுங் காலை"**

என்னும் அகத்திணை நூற்பா உரையில், உரையாளர் முதலிற் கருவும், கருவில் உரியும் ஒன்றின் ஒன்று சிறந்தவை என்றது எண்ணத்தக்கது.

**"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்திவ் வுலகு"**

என்னும் குறளில் வரும் **பெருமை**யின் பொருளை மெய்யுற அறியத் தொல்காப்பிய அறிவு இல்லாக்கால் மங்கல வழக்கு என்றுதானே கொள்ளவேண்டும்!

"**மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை**" அல்லவோ இது! நேற்று எம்மோடு மாந்தனாக இருந்தான் இன்று மாப்பெருவீரனாய், அமரனாம் பெருமையுற்றான்! படையல் இட்டுப் படலைச் சார்த்தி வழிபடும் தெய்வப்பேறு பெற்றான் என்னும் பெருமையை அல்லவோ சுட்டுவது.

**"பீடும் பெயரும் எழுதி அதர்தொறும் நாட்டிய**
**பிறங்குநிலை நடுகல் லாகிய"**

பெருமை அல்லவோ அது!

இதுகாறும் சொல்லப்பட்டவற்றால் **முப்பாலுக்குத் தொல்காப்பியம் எத்தகு மூன்மையது என்பது விளங்கும்.**

**காப்பியக்காலத்திற்கு முற்பட்டது தொகை நூல் காலம். தொகைநூல் காலத்தொடு சேர்ந்தும் முந்தும் தோற்றமுற்றது**

**திருக்குறள். திருக்குறளுக்கு முந்துறத் தோன்றியது தொல்காப்பியம் – என்னும் முறைமையைக் கொண்டு மேலே செல்வோம்.**

**தொன்முன்மை**

*திருக்குறள், தொகை நூல்கள் ஆயவற்றுக்கு முன்னரே தொல்காப்பிய வழக்குகள் மறைந்துபோயின. அவரே,* **தொல்லோர் வழக்கு** *என்று சொல்லிய வழக்குகள் பின்னவர்க்கு வாய்க்கும் என்பதற்கு இடமில்லையே! இவ்வாறான வழக்குகளைப் பழைய உரையாசிரியர்கள் அவ்வந் நூற்பா உரைகளிலேயே சுட்டியுளர். பின்னை ஆய்வாளர்களும் கூரிய சீரிய வகையில் கண்டு தொகுத்தும் உள்ளனர். விரிவுமிக்க அவற்றை முழுவதாகச் சுட்டாமல் சிலவற்றைச் சுட்டுவோம். அதுவே பெரிதாம் அளவில் நிற்பது:*

*தொல்காப்பியர் நாளில்* **பாட்டி** *என்றொரு சொல் வழங்கியது. இன்று நாம் பாட்டி என்பதற்குக் கொள்ளும் பொருள் தாய் தந்தையரைப் பெற்றவரைப் பாட்டி என்னும் முறைப்பெயராக அழைப்போம். சங்க நாளிலே பாட்டி என்றால் பண்ணிசைத்துப்பாடும் பாணன் மனைவியைக் குறித்தது. தொல்காப்பியர் காலத்திலோ பன்றி,நாய்,நரி என்பவற்றைக் குறித்தது அது.*

> "பாட்டி என்பது பன்றியும் நாயும்"
>
> "நரியும் அற்றே நாடினர் கொளினே"

*என்பவை மரபியல் நூற்பாக்கள் (35, 36)*

*கோழி என்னும் பொதுப் பெயர் சேவற்கோழி, பெட்டைக் கோழி எனப் பால்பிரிவு கொண்டு உரைக்கப்படும். இவற்றில்* **சேவல்** *என்பது தொல்காப்பியர் நாளில் பறப்பனவற்றுள் ஆண்பால்களுக்கெல்லாம் பெயராக*

இருந்துள்ளது. தோகை அமைந்த மயில், ஆண்பால் எனினும் அதனைச் சேவல் எனல் ஆகாது. அதன் பெண்மைச்சாயல், சேவல் பெயரீட்டுக்குத் தடையாகும் என்பது தொல்காப்பியம்.

**"சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணும்
மாயிரும் தூவி மயில்அலங் கடையே"**

என்பது. இதனைக் கூர்ந்தாராயும் பேராசிரியர், "தோகையுடையவாகிப் பெண்பால் போலும் சாயல் ஆகலான் ஆண்பால் தன்மை இல என்பது கொள்க. எனவே செவ்வேள் ஊர்ந்து அமர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும்படும்" என்கிறார். தொல்காப்பியர் சாயல் கருதி உரைத்தார். பேராசிரியர் தொன்மம் (புராணம்) சுட்டும் முருகன் ஊர்தி, கொடி என்பவை கொண்டு கூறுகிறார்.

பறவைச் சேவல் பெயரைக் குதிரை ஆண்பாற்கு இயைத்துக் கொள்ளும் மரபைச் சுட்டுகிறார் தொல்காப்பியர்.

**"குதிரையுள் ஆணினைச் சேவல் என்றலும்"**

என்பது அது. பேராசிரியர் இத்தொடர்க்கு, "குதிரையைச் சேவல் என்றல் இக்காலத்து அரிதாயிற்று. அதுவும் சிறகொடு சிவணாதாயினும் அதனைக் கடுவிசைபற்றிப் பறப்பது போலச் சொல்லுதல் அமையும்" என்பது கருத்து என்கிறார்.

எருமை ஆணினைக் **கண்டி** என்னும் வழக்கு தொல்காப்பியர் நாளில் இருந்தது என்பது "எருமையுள் ஆணினைக் கண்டி என்றலும்" என்பதால் புலப்படும். இதனைப் பேராசிரியர் "அது காணலாயிற்றில்லை" என்கிறார். அவ்வாறே, **மூடு, கடமை** என்னும் பெயர்களை ஆடுபெறும் என்னும் இடத்தில், "இவை இப்பொழுது வழக்கினுள் அரிய" என்கிறார் பேராசிரியர். (மர.94) ஆனால், திருச்சிராப்பள்ளி வட்டாரத்தில் ஆட்டிற்கு மூடு என்னும் வழக்கு உள்ளமை

அறியக்கிடக்கிறது. இதில் இருந்து ஒரு செய்தி. ஒரு வழக்கு ஒருகாலத்து ஓரிடத்து இல்லை எனத் தோற்றம் தந்தாலும், எல்லாக்காலத்தும் எல்லா இடத்தும் இல்லாமல் - வழக்கு இல்லாமல் - முற்றாக அழிந்து போவதில்லை. அழிந்தமை பொதுவில் காணக்கிடப்பினும் புதைபொருள் - தொல்லியல் - ஆய்வாளிக்குக் கிடைக்கும் புலனம் (சான்று) போலக் கிட்டுவதும் உண்டு. குடியேற்றப் பாதுகாப்பு என்னும் இயற்கை வழக்கு அரணம்போல இந்நாட்டுமக்கள் எந்நாட்டுட் குடிபுகுந்து வாழ்குவராயினும் ஈங்குக் கொண்டிருந்த வழக்குகளைப் பாட்டி வழங்கிய பழம் பொருள் போலப் பாதுகாப்பது உண்டு எனக் கொள்ளவேண்டும்.

தவம் என்பதொரு தன்மை; தவம் எனத் திருக்குறளில் ஓர் அதிகாரம் உண்டு. தவம் என்பது தவ என்னும் நிலையில் மிகுதி என்னும் பொருள்தரும் என்பது தொல்காப்பியம் - உரியியல். போலித்தவம் பெருகிவிட்ட இந்நாளில் தவ என்பதன் உரிப்பொருள் காணல் அரிது எனின், திருச்சிராப்பள்ளி வட்டாரத்தில், அது தவப்பிஞ்சு (மிகச் சிறு பிஞ்சு) என்னும் வழக்கு உள்ளது. நரல் என்பது மக்கள் பெருக்கத்தைக் குறிக்கும் நெல்லைப் பகுதிவழக்குச் சொல். முறம் என்பது எங்கும் அறியும் சொல்லாக இருக்க சுளகு என்பது நெல்லை வட்டாரத்தில் மட்டுமே வழங்கும் சொல்லாக உள்ளது. சொல்லாய்வு கொண்டு ஒருவர் காலத்தைத் தீர்மானிக்கும்போது, ஏதோ ஒரு சொல்லைச் சுட்டிக்காட்டி இது இவ்வளவு பிற்காலத்தது என்று கொண்டு தீர்மானித்துவிடல் ஆகாது என்பதற்கே இவை சொல்லப்பட்டன. தொல்காப்பியர் நாளில், **அதோளி, இதோளி, உதோளி, எதோளி** என்னும் சொற்கள் வழக்கில் இருந்தன என்பதை அறியும் நாம் அச்சொற்கள் சங்க இலக்கியப் பரப்பிலோ திருக்குறளிலோ இடம் பெறாமை கொண்டு தொல்காப்பியத்திற்கும் இவற்றுக்கும் உள்ள நெடிய இடை

வெளியை உணரலாம். அதோளி. இதோளி முதலியவை சுட்டு முதலாகிய இகர இறுபெயர், வினா முதலாகிய இகர இறுபெயர் எனவும் வழங்கும். அதோளி அவ்விடம் என்பது போன்ற பொருளவை இச்சொற்கள். இவ்வாறே **குயின்** என்பதொரு சொல்லும் வழக்கு வீழ்ந்தது. இதுபற்றிப் பேராசிரியர் "ஒரு காலத்து வழங்கப்பட்டசொல் ஒரு காலத்து இலவாகலும் பொருள் வேறுபடுதலும் உடைய. அவை அதோளி, இதோளி, உதோளி எனவும் குயின் எனவும் நின்ற இவை ஒருகாலத்து உளவாகி இக்காலத்து இலவாயின. அவை முற்காலத்து உள என்பதே கொண்டு வீழ்ந்த காலத்தும் செய்யுள் செய்யப்படா. அவை, ஆசிரியர் நூல் செய்த காலத்து உளவாயினும் கடைச் சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையின் பாட்டினும் தொகையினும் அவற்றை நாட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர் அவற்றுக்கு இது மரபிலக்கணம் ஆதலின்" என்பது.

இனி, "பாட்டினும் தொகையினும் உள்ள சொல்லே மீட்டொரு காலத்துக்கு உரித்தன்றிப் போயினவும் உள. அவை முற்காலத்துளவென்பதே கொண்டு பிற்காலத்து நாட்டிச் செய்யுள் செய்யப் பெறா என்பது" என்கிறார் (தொல்.செய்.80)

ஆனால் சோழன் நல்லுருத்திரன் என்பார் இயற்றிய முல்லைக்கலியில், ஈதோளிக் கண்டேனால் என்னும் தொடர் இடம் பெற்றுள்ளது (117)

"இது. இதோளி 'ஈதோளி' எனச் சுட்டு நீண்டு நின்றது" என்கிறார் உரையாசிரியர் நச்சினார்க்கினியர்! அற்றுப்போன ஆட்சி என்பதும், எங்கோ தலை நீட்டுதல் கண்டு, ஆய்வாளர் பார்வை இருத்தல் வேண்டும் என்பதன் சான்று ஈதாம்.

அழன், புழன் என்னும் சொற்களைப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார் (எழுத்து.193) "அழன் புழன் என்பன போல்வன இக்காலத்து இல என்றும், புதியன

தோன்றினாற்போலப் பழையன கெடுவனவும் உள. அவை அழன் புழன் முதலியனவும், எழுத்திற் புணர்ந்த சொற்கள் இக்காலத்து வழங்காதனவுமாம்" எனவும் உரையாசிரியர்கள் வரைகின்றனர்.

பெண்மகள் என்பது தொல்காப்பியர் காலத்தில் 'பெண் மகன்' எனவும் வழங்கியமையால். "பெண்மை அடுத்த மகனென் கிளவியும்" என்றார். இதற்கு நச்சினார்க்கினியர், "கட்புலனாயதோர் அமைதித் தன்மையடுத்து நாணுவரை இறந்து புறத்து விளையாடும் பருவத்தால் பால் திரிந்து பெண் மகன் என்னும் பெயர்ச்சொல் என்று பொருளும், பெண்மகன் என்பது அத்தன்மையாரை அக்காலம் அவ்வாறே வழங்கினாராயிற்று இங்ஙனம் கூறலின்" என்று விளக்கமும் வரைந்தார்.

"புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்பாலரையும் பெண்மகன் என்று வழங்குப" என்று உரையாசிரியரும், "மாறோக்கத்தார் அப்பருவத்துப் பெண்பாலாரை இக்காலத்துப் பெண்மகனென வழங்குப" என்று சேனாவரையரும் கூறுவர். மாறோகம் என்பது கொற்கை சார்ந்த பகுதி. மாறோக்கத்து நப்பசலையார் சங்கப் புலவர். சேனாவரையர் ஊர் கொற்கை சார்ந்த ஆற்றூர்!

பெண்பிள்ளையை வாடா போடா முதலாக ஆண்பால்பட அழைப்பதும், ஆண் உடை உடுத்து அழகு பார்ப்பதும் அன்பின் பெருக்கால் விளைவது.

ஒரு பெருமூதாளர்! ஊன்றுகோல் காலாக உதவ ஒரு நீர்நிலைப் படிக்கட்டில் அமர்ந்திருக்கிறார். பால்வேறுபாடு அற்ற நிலையில் சிறுவரும் சிறுமியரும் நீராடும் ஆட்டத்தை ஓவியமாக வடிக்கிறார்

**திணிமணல்,**

**செய்வுறு பாவைக்குக் கொய்பூந் தைஇத்**
**தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து**
**தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி**
**மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு**
**உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து**
**நீர்நணிப் படுகோடு ஏறிச் சீர்மிகக்**
**கரையவர் மருளத் திரையகம் பிதிர**
**நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து**
**குளித்துமணற் கொண்ட கல்லா இளமை**

என்கிறார். உளவியல் கூர்ந்த பாலியல் பகுப்புப் பழமையைத் தொல்காப்பியர் உரைத்தார்; தொடித்தலை விழுத்தண்டினார் என்னும் முதுபெரும்புலவர் அதன் மெய்ம்மத்தை நிறுவினார்.

ஒரு துறைக்கண் மேம்பட்டாரைப் பாராட்டுதல் பண்டு தொட்டே வழங்கி வரும் வழக்கமாம். சிறந்த போர்வீரர்க்கு ஏனாதி; சிறந்த வாணிகர்க்கு எட்டி - என்பவை முதலாகப் பல விருதுகள் வழங்கப்பட்டன. அவை சிறப்புப் பெயர் எனப்பட்டன. குடும்பத்தில் இடப்பட்ட பெயர் இயற்பெயர். ஒருவர்க்கு இயற்பெயரொடு சிறப்புப்பெயரும் சேர்கிறது. அவ்விரு பெயர்களில் எப்பெயர் முன்னாகவும், எப்பெயர் பின்னாகவும் இருத்தல் வேண்டும் என்பதைத் தொல்காப்பியர்,

**“சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு**
**இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்”**

என்று இலக்கணம் வகுத்தார். எ-டு:

தெய்வப் புலவர் திருவள்ளுவர்
கணியன் பூங்குன்றனார்

இம்முறை இடைக்காலத்தில் சிலரால் போற்றப் படாமையால், "கடிசொல் இல்லை காலத்துப்படினே" என்பது கொண்டு ஏற்றுப் போற்றினர் உரையாசிரியர்.

இம்முறை போற்றும் வகையால், இந்நாளில்,

நாவலர் ச.சோ.பாரதியார்
மொழிஞாயிறு ஞா.தேவநேயப்பாவாணர்
செந்தமிழ் அரிமா. சி. இலக்குவனார்
முனைவர் வ.சுப.மாணிக்கனார்
தமிழ்ப் பேரொளி பாரதிதாசனார்.

மக்கள் என்பது பன்மைப் பெயர். அதனை மக்கள்கள் என எவரும் வழங்கார் பழங்காலத்தில். ஆடுகள், மாடுகள், மலைகள் என அஃறிணையை அன்றி உயர்திணைப் பன்மைக்குக் கள் என்பது சேர்ப்பது இல்லை; சேர்ப்பது பிழை.

"அவன் அவள் அவர் அது எனும் அவை" என்பது மெய்கண்டார் தொடர்; பலர் பாலுக்கே 'கள்' சேர்க்கக் கூடாது என்றிருக்க, ஒருவருக்கே அவர்கள் எனக் 'கள்' சேர்ப்பது வழக்கம் ஆகிவிட்டது. அவர்கள் இவர்கள் பெரியவர்கள் என்பவை அவாள் இவாள் பெரியவாள் என்றெல்லாம் ஆகிவிட்டன. காளமேகப் புலவர் இவ்வழக்கை எள்ளுவது போல் பாடியுள்ளார்.

"செற்றலரை வென்ற திருமலைரா யன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள் - மற்றைவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவாள் இவாள்அவாள் ஆம்!"

என்பது அது.

உயர்திணைக்கு ஒட்டாத **கள்** 'பூரியர்கள்' எனத் திருக்குறளில் (919) இடம் பெறுகிறது. 'மற்றையவர்கள்' என்றும் இடம் பெறுகிறது (263)

**மார்** என்பதொரு சொல்லீறு, வினைச் சொல்லிலேயே வருவது தொல்காப்பியர் காலத்து வழக்கு. சென்மார், பாடன்மார் எனவரும். ஆனால் அவ்வீறு தோழிமார் (அகம்.15) என வருவது ஆயிற்று.

அவன் பருகுவன்; அவன் படிப்பன் என அன் ஈறு படர்க்கை ஆண்பாலுக்கே வரும். ஆனால், நான் பருகுவன்; நான் படிப்பன் என வழங்குதல் உண்டாயிற்று. இவ்வழக்கு வள்ளுவர் நாளிலேயே, "இரப்பன் இரப்பாரை எல்லாம்" எனத் தன்மைக்கு அன் ஈறு வந்துவிட்டது. வரவேண்டும் முறை நான் பருகுவென்; நான் படிப்பென்; யான் இரப்பென் என்பனவாம்.

இன்னவை இன்னும் பல. இவ்வேறுபாடு ஏற்பட வேண்டும் எனின் **தொல்காப்பியர்க்கும் திருவள்ளுவர்க்கும் சங்கச் சான்றோர்க்கும் நெடிய இடைவெளி இருத்தல் வேண்டும்** என்பதேயாம்.

தமிழ் எண்கள் ஒன்று முதல் நூறு வரை உகரத்தால் முடியும் சிறப்பின. எட்டு என்பதை அடுத்துத் தொண்டு என்றோர் எண் இருந்து வீழ்ந்துபட்டது. அவ்விடத்திற்கு எண்பதுக்குமேல் இருந்த ஒன்பது இறங்கிவிட்டது. மற்றை எண்களும் (தொண்ணூறு தொள்ளாயிரம்) என்பனவும் இறங்கிவிட்டன. தொல்காப்பியர் நாளில் 'தொண்டு' 'ஒன்பது' என்னும் இரண்டும் ஆட்சியில் இருந்தமை அறியமுடிகின்றது.

ஒன்பது என்பதற்கு இலக்கணமுடிபு கூறும் அவரே, (குற்.40) "**தொண்டு தலையிட்ட**" என ஆள்கிறார் (செய்.100) பரிபாடல் ஆசிரியரும், மலைபடுகடாம் ஆசிரியரும் தொண்டு என்னும் எண்ணைப் பயன்படுத்துகின்றனர். பின்னர் அவ்வழக்கு அழிந்தது.

இனி யாப்பு வகையால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், மறைவுகள் மிகப்பலவாம்.

தொல்காப்பியச் செய்யுள் இயலையும் காக்கை பாடினியம், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்பவற்றையும் மேலோட்டமாக நோக்கினும் எளிதில் புலப்படும்.

சார்பெழுத்து மூன்று என்பது தொல்காப்பியம். அது பின்னே பத்தாகவும், 369 ஆகவும் பெருக்கிக் கொள்ளப்பட்டன.

நேர், நேர்பு, நிரை, நிரைபு எனப்பட்ட அசைகள் நேர் நிரை என்ற அளவில் குறைந்தது.

எழுத்தை எண்ணிக் கொள்ளப்பட்ட குறளடி முதலியன சீர் எண்ணிகொள்ளும் நிலையை எய்தியது.

பா வகையில் கலியும் பரியும் வழக்குக்குன்றித் தாழிசை துறை விருத்தம் என்னும் இனம் மிகப் பெருக்க முற்றது.

சிற்றிலக்கியங்கள் பெருக்க முற்றன.

தொன்மம், புராணம் என்னும் பெயரால் புனைபொருள் ஆகிவிட்டது.

தொன்மை என உரையொடு வழங்கிய பழைய வரலாறு இல்லாது ஆகியது.

உவமை என்னும் ஓரணி அணியியல் எனப் பெருகியது.

அகம் புறம் ஆகிய பொருள் திணை, துறைப் படுத்துப்பாடும் முறை அருகியது.

இன்னவாறு மேலும் பல மாற்றங்கள் ஏற்படுதற்கு நெடிய இடைவெளி யாகியிருக்கும் என்பது எளிதில்

அறிவதாம். இடைவெளி நெடிது, **மிகுதி என்பதால் காலம் கணிக்கப்பட்டுவிடுமா? எனின், தொல்காப்பியம் தரும் அகச்சான்றுகளையும் அக்கால நிலைக்கு வாய்த்த புறச்சான்றுகளையும் கொண்டே முடிவு செய்தல் வேண்டும்.**

**அகச்சான்று**

தொல்காப்பியர் காலத்தில் மூவேந்தர் ஆட்சி நிகழ்ந்தது. சேர, சோழ, பாண்டிய நாடு எனினும் அது மொழியால் செந்தமிழ் நிலமாக இருந்தது. அந்நாளில் தொண்டை நாடு என ஒரு நாடு தோற்றமாயிற்று இல்லை. அந்நாளில், தமிழகத்தே வடமொழியாளர் வரவால் அவர் மொழியும் வரலாயிற்று. ஆயினும் அவர் வழங்கிய வடசொல்லை வழங்குதல் ஆகாது. அப்படி வழங்க நேர்ந்தாலும் வடமொழி எழுத்தை ஏற்காமல் தள்ளித் தமிழ் மரபுக்குத் தகத் தமிழ் எழுத்தில் வழங்க வேண்டும் என்பவற்றைத் தொல்காப்பியர் கட்டளைப் படுத்துகிறார். ஆதலால், வடவர் தென்னாடு புகுந்த காலத்தைச் சார்ந்து, அவர்தம் மொழியைத் தமிழ் மண்ணில் பரப்பத் தொடங்கிய நாளில், மொழியாற்றுக்கு வகுத்த வலிய கரைபோல இலக்கணம் வகுத்துக் காத்தார்.

**வடசொற் கிளவி வடஎழுத் தொரீஇ**
**எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே**

என்பது அந்நூற்பா (884) **தொல் காப்பு இயம்** என்னும் பெயரீடு அறிக.

பாயிரத்தில் பனம்பாரனார் தமிழ் கூறு நல்லுலக எல்லையாக வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம் என்கிறார். வடக்கே கூறிய எல்லை வடவேங்கடம்; இது மலை. இவ்வாறே தெற்கே கூறிய எல்லை தென்குமரி; இதுவும் மலையாகவே ஆதல் வேண்டும். அன்றி, ஆறோ, கடலோ ஆயின் அதனைக் குறிப்பிட்டிருப்பார்! ஆதலால்,

குமரிமலை இருந்த காலத்தில் தொல்காப்பியர் வாழ்ந்தார் என உறுதி செய்தல் வேண்டும்.

> **"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
> **குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"**

என்னும் சிலப்பதிகாரத் தொடர்கொண்டு குமரிக்கோடு கொடிய கடலால் கொள்ளப்பட்ட காலத்திற்கு முற்பட்ட காலத்தினர் தொல்காப்பியர் என்பதைத் திட்டப்படுதல் வேண்டும். அது, கவாடபுரத்துத் தமிழ்ச் சங்கம் தோன்றுவதற்கு முற்பட்டும், தென்மதுரைத் தமிழ்ச் சங்கம் அழிவுற்ற காலத்திற்குப் பிற்பட்டும்கொள்ள வேண்டும் காலம். அக்காலம் இடைச்சங்கக் காலம். கபாடபுர அழிவின்பின் தொல்காப்பியர் சங்கத் தலைமை இல்லாமையால் **கபாடபுர அழிவுக் காலத்தொடு தொல்காப்பியர் இயற்கைக் காலம் எண்ணப்படவேண்டும்.** பாயிரத்தின் வழியாக அறியப் பெறும் அகச்சான்றுகளுள் தலையாய ஒன்று, தொல்காப்பியர் ஐந்திரம் நிறைந்தவர் என்பது. ஐந்திரம் வடமொழி இலக்கண முதல்நூல். அதன் மறைவுக்குப் பின் தோன்றியதே பாணினியம் என்னும் இலக்கணநூல். இவற்றால் தொல்காப்பியர் பாணினி காலத்திற்கு முற்பட்டவர் என்பதும் ஐந்திரக் காலத்தவர் என்பதும் விளங்கும்.

**யவனர்**

யகர வரிசையில் யா என்னும் எழுத்தையன்றி எவ்வெழுத்தும் சொல்லின் முதலாக வாராது என்கிறார் தொல்காப்பியர். ஆதலால், அவர் யவனர், யவனத்தூதர் வருகைக்கு முற்பட்டவர் எனக் கொள்ளல்வேண்டும். சங்கச் சான்றோர்,

> **"யவனர் தந்த வினைமாண் நன்கலம்"**
> **"யவனத் தச்சர்"**

என வழங்குகின்றமை கொண்டு இதனைத் தெளியலாம்.

கயவாகு காலமும் செங்குட்டுவன் காலமும் ஒன்று எனச் சிலப்பதிகாரத்தின் வழி அறிவதாலும், அக்காலம் கி.பி.174-196 எனக் குறிக்கப்படுவதாலும், அச்செங்குட்டுவனுக்கு முன்னர்க் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல், பல் யானை செல்கெழுகுட்டுவன். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், உதியஞ்சேரல் என்பார் ஆட்சி நிகழ்ந்தமைப் பதிற்றுப்பத்தால் அறியப்படுவதாலும், அக்காலம் ஏறத்தாழ 200 ஆண்டுகளாம் எனப்பதிகத்தால் அறிய வருதலாலும் தொல்காப்பியர் காலம் **கி.மு.விற்குப் பிற்பட்டது ஆகாது என்று உறுதிசெய்யலாம்.**

கிரேக்கத்தில் இருந்து (யவனம்) அலெக்சாண்டர் (356-323) படையெடுப்பும், மெகசுதனிசு என்னும் யவனத்தூதர் கி.மு.320-298 வரை இந்தியாவில் இருந்ததை வரலாறு கூறுவதும், மௌரிய சந்திரகுப்தர் காலம் கி.மு.320-296 என அறியப்படுவதும் கொண்டு **அக்காலத்திற்கு முற்பட்டவர் தொல்காப்பியர்** எனக் கொள்ளவேண்டும். பாணினியம் இயற்றிய **பாணினியின் காலம் கி.மு. 4 ஆம் நூற்றாண்டு என்றும் 5 ஆம் நூற்றாண்டு** என்றும் கூறப்படுவதாலும். பாணினி தம் இலக்கணத்தில் யவனம் என்னும் சொல்லை வழங்குவதாலும் அவர் காலத்தில் ஐந்திர நூல் வழக்கு ஒழிந்துவிட்டது என அறியப்படுதலாலும். அக்காலத்தில் **கொற்கைமுத்து** குறிக்கப்படுவதாலும், **தொல்காப்பியர் காலம் கி.மு.4 அல்லது 5 ஆம் நூற்றாண்டுகளுக்கு முற்பட்டமை அறியலாம்.**

**ஐந்திரம்**

ஐந்திர வியாகரணம் இந்திரனால் அருக தேவர்க்கு உரைக்கப்பட்டது என்பது சிலப்பதிகாரத்தால் அறியப் படுதலாலும், அவ்வருகர் காலம் கி.மு.599-527 என அறியப் படுவதாலும், அவ்வைந்திரம் நிறைந்த தொல்காப்பியர் காலம், அக்காலத்திற்கு முற்பட்டதாக இருக்கவேண்டும். ஏனெனில்,

**அருக சமயம் பற்றிய குறிப்பு எதுவும் தொல்காப்பியத்தில் இல்லை என அறிந்துள்ளோம்.**

**கபாடபுரம்**

முதற் கடல்கோளால் தென்மதுரை அழிந்தபின் நிலந்தரு திருவிற் பாண்டியனால் நிறுமிக்கப்பட்டதாம் இடைச்சங்கத்தில் அவன் கூட்டிய அவையில் அதங்கோட்டாசான் தலைமையில் தொல்காப்பியம் அரங்கேற்றமாய தாலும் தொல்காப்பியனார் கபாடபுரக் கழகத்தில் இருந்தாராக அறிதலாலும் கபாடபுர அழிவொடு இரண்டாம் சங்கம் நிறைவுற்றதாலும் **தொல்காப்பியர் காலம் கபாடபுர அழிவுக்காலம் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டுவதாம்.**

**ஐந்திரமும் வேற்றுமையும்**

தொல்காப்பியர் ஐந்திரம் கற்றுத்தேர்ந்தவர். தம் இலக்கணத்தில் வேற்றுமை இயலின் தொடக்கத்தில்,

**வேற்றுமை தாமே ஏழென மொழிப**

என்றவர்,

**விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே**

என்று எட்டாக்குகிறார். எட்டாம்வேற்றுமை பெயரும், பெயரின் விகாரமும் ஆதலால், ஒன்றெனக் கொண்டவர் ஐந்திரத்தார் என்பதைச் **சேனாவரையரும்,** நன்னூல் முதல் உரையாசிரியர் **மயிலை நாதரும்** சுட்டுகின்றனர்.

**“ஏழியன் முறையது எதிர்முக வேற்றுமை**
**வேறெென விளம்பான்; பெயரது விகாரமென்று**
**ஓதிய புலவனும் உளன்; ஒரு வகையால்**
**இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்”**

என்னும் ஐந்திர நூற் கருத்தைச் சுட்டும் நூற்பாவைத் தொல்காப்பிய நூற்பாவொடு ஒப்பிட்டுக் காணுமாறு (மயிலை நாதரும் (நன்னூல்) சேனாவரையரும்) காட்டியுள்ளர். ஆதலால், ஏழுவேற்றுமை எனக்கொண்ட தொல்காப்பியர், அதனொடு சாரத் தனி நூற்பாவால் விளி கொள்வதன்கண் விளியோடு எட்டே என ஏற்றார். இவ்வேற்பு ஐந்திரம் சார்ந்தது எனத் தெளிய வாய்க்கின்றது. தொல்காப்பியரின் ஐந்திரம் நிறைதலுக்குச் சான்றாகின்றது.

**சொல் பகுநிலை**

இனி மற்றொரு சான்று, ஐந்திரம் சொல்லின் முதனிலை, இடைநிலை, இறுதிநிலை பற்றிய **பகுப்புகள் உடையது இல்லை.** ஆனால், பாணினியம் அப்பகுப்புகளை உடையது. பாணினியத்திற்கு முன்னவராகத் தொல்காப்பியர் இருந்தமையாலும் அவர் நிறைந்திருந்த ஐந்திரத்தில் அப்பகுப்பு இல்லாமையாலும் தமிழ் மரபில் எல்லாச் சொல்லும் பொருள் குறித்த தனிச்சீர்மை இயற்கை நெறிப்பட அமைந்து கிடந்தமையாலும், அப்பகுப்பு தேவைப்பாடு அற்றதாய் இருந்ததால் வித்து வேர் முளை கிளை என விளங்கிய அளவில் நின்றது; இந்நெறியும் ஐந்திரம் கொண்டிருந்த நெறியாம்.

**தமிழியம்**

தமிழ் நெறியில் நூல்யாத்த தொல்காப்பியர் ஐந்திரம் கற்றதால் அதனை வழிமொழிந்தார் அல்லர். வழி மொழிந்திருப்பின் பொருளதிகாரம் என மூன்றாம் அதிகாரத் **தமிழர் வாழ்வியல் பெட்டகம்** நாம் காண வாய்த்திராது; பிறர் பிறரும் பின்னால் பொருள் இலக்கணம் (அகப்பொருள் புறப் பொருள்) வகுத்திரார். அகத்துறையும் புறத்துறையும் பாடுபொருளாகிப் பாட்டு தொகை எனக் கையில் கனியாகத் தவழ்ந்திருக்க நேர்ந்திராதாம்.

இவ்வைந்திரம் பற்றிச் சிலப்பதிகாரம்,

**"விண்ணவர் கோமான் விழுநூல்"**

என்றும்,

**"கப்பத் திந்திரன் காட்டியது"**

என்றும் குறிக்கின்றது.

**ஐந்திர நூல் காலம்**

ஐந்திர நூலைக் கேட்டவருள் ஒருவர் அருகதேவர் என்றும், அவர்க்கு இந்திரன் ஓதினான் என்றும் அருக நூல்கள் கூறுகின்றன. ஆகலின், அந்நூல் அவர் காலத்திற்கு முன்னரே இயற்றப் பட்டிருக்கவேண்டும். அவர்காலம் கி.மு.599-527 என்பர். அவர்தம் ஐந்திரக் கேள்வி அகவை முப்பதில் என்றால் கி.மு.569 இல் கேட்டாராதல் வேண்டும். அந்நூல் அக்காலத்திற்கு முன்னர் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

இனி, அருக சமயம் புத்தசமயம் பற்றிய செய்திகள் எவையும் தொல்காப்பியத்தில் இடம் பெறவில்லை. அன்றியும் தொல்காப்பியர் கூறிய **மக்கள் தாமே ஆறறிவுயிரே** என்னும் மன அறிவுக்கொள்கை அருக சமயத்தார் ஏற்பது அன்று. நன்னூலார் அருக சமயத்தார் ஆதலால், அவர் ஐயறிவுக் கொள்கை அளவிலே நின்றமைகொண்டு அறியலாம்.

இவற்றால் அருகர், புத்தர் ஆகிய இருவரும் அறவுரை கூறிப்பரப்பிய காலத்திற்கும் - கி.மு. ஆறாம் நூற்றாண்டு நடுப்பகுதிக்கும் முற்பட்டு இருந்தவர் தொல்காப்பியர் எனக் கொள்ளல் முறையாம். ஒரு காலத்தவர் எனினும் அக்கொள்கை உடன்பாடு இருப்பார் அன்றிப் பிறர் கூறாரே!

முற்பட்டவர் என்னின், அம்முற்பாட்டைக் காண வேறு ஏதேனும் சான்று வேண்டும். அச்சான்று கடல்கோள் சான்றாம்.

இலங்கை வரலாற்றின்படி மூன்று கடலூழிகள் அறிய வருகின்றன. அவை:

1. கி.மு.2387 இல் இலங்கை **தென்னிலத்தில் இருந்து பிரிவுபடுமாறு** அமைந்த கடல்கோள்.

2. கி.மு.504 இல் **பாண்டுவாசா என்பார் காலத்தில்** ஏற்பட்ட கடல் கோள்.

3. கி.மு.306 **தேவனாம் பிரியன் நாளில்** ஏற்பட்ட கடல்கோள்.

இவற்றைச் சான்றாகத் **தமிழ் நாட்டு வரலாறு** கூறுகின்றது. தமிழ் நாட்டு அரசு வெளியீடு : 1975.

கி.மு.145-இல் ஒரு கடல்கோள் நிகழ்ந்ததாகச் சான்று காட்டுகிறார் இரா.இராகவர் இவற்றின் பின்னரும் தமிழகப் பரப்பில் ஏற்பட்ட கடல்கோளால் புகார் நகர் முதலிய பகுதிகள் அழிந்துள. கொற்கை, கீழ்கடல் தொண்டி முதலியவும் அழிந்துள. இக்கடல்கோள் சிலப்பதிகார காலத்தை அடுத்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

தென்னகத்தில் இருந்து இலங்கை பிரிந்த காலத்துக் கடல்கோளின் பின்னரே வான்மீகர் வாழ்ந்து தென்னகம் பற்றி உரைத்ததால் 'கடல் சூழ் இலங்கை' என்கிறார். சீத்தலைச்சாத்தர், 'குரங்குசெய் குமரியம் கடற்றுறை' என்கிறார். ஆதலால், இலங்கை தீவமாகப் பிரிந்த பின்னிலை இவர்கள் காலமாம் நிற்க. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருக தேவர் கேட்ட ஐந்திரத்தைத் தொல்காப்பியரும் கற்றார். ஆதலால், அக்கால எல்லை தொல்காப்பியர்க்கும் ஏற்பதேயாம். வழக்கு செய்யுள் கற்று அவர் ஐந்திரப் புலமையும் பெற ஐம்பது அகவையர் ஆகி இருக்கக் கூடும். பின்னர்த் தொல்காப்பியம் இயற்றி அரங்கேற்றமும் நிகழ நெடிய காலம்

தேவைப்பட்டிருக்கும். நூல்அரங்கேற்றத்தின் பின்னரும் வாழ்ந்து இரண்டாம் கடலூழிக்கு ஆட்பட்டனர் எனலாம்.

கி.மு.504-இல் ஏற்பட்ட கடல்கோள் அது எனின் கி.மு.594 தொல்காப்பியர் தோன்றிய மேல் எல்லையாகவும். கி.மு.504 தொல்காப்பியர் வாழ்வு முடிவு எல்லையாகவும் கொள்ளலாம். இதற்கு ஓர் அரிய சான்றும் உளது.

இலங்கை வரலாறு கூறும் முதற்கடல்கோள், தென்னிலமாகிய குமரிக் கண்டத்தில் இருந்து அல்லது இந்திய இணைப்பில் இருந்து இலங்கையைப் பிரித்த காலத்தது. இரண்டாம் கடல்கோள் பாண்டுவாசா என்பார் காலத்தில் (பாண்டிய அரசர்) ஏற்பட்டது. இப்பாண்டுவாசா என்பார் நிலந்தரு திருவிற் பாண்டியன் எனக் கொள்ளத்தகும். இடைச்சங்க அழிவு அவனொடும் தொடர்புடையதாக வரலாறுகள் அனைத்தும் கூறுவதாகலின். ஆதலின் அக்காலமே தொல்காப்பியர் காலமும் ஆம் என்பது.

உள்ள சான்றுகள் மாறவும் கூடும். மேலும் வலிய சான்றுகள் வாய்க்கவும் கூடும் வேறு வகை முடிபு சீராக வாய்க்குமெனின் இக்கணிப்பைப் புறம்தள்ளித் தக்க முடிவை ஏற்பதும் ஆய்வுச்சால்பாம். எப்படியும் ஒரு மெய்ம்மை கண்டு நிலைப்படுத்த வேண்டும் என்பதே ஆய்வாளன் நோக்காக இருக்கவேண்டும். அந்நோக்கு எமக்கு ஏற்றது மட்டுமன்று, எவர்க்கும் வேண்டுவதாம். இதனைப் பின்னுக்குத் தள்ளி முன்னுக்கு நிலைநாட்டும் சான்றுகிட்டின் அதனைக் கண்டார் கொண்ட மகிழ்வு எமக்கும் உண்டாம்.

இவ்வகையால் கி.மு.504 இல் பாண்டுவாசா காலத்தில் ஏற்பட்ட கடல்கோள் இடைச்சங்க அழிவாய் அமைந்து தொல்காப்பியர் காலத்தைத் தீர்மானிக்க உதவுகிறது. அக்காலத்தின் மேலெல்லை கி.மு.594 தொட்டுக்கீழெல்லை

கி.மு.504 ஆகலாம். இயல்பான தொண்ணூறு வயது என்பது இயலாதது அன்றாம்.

இனி ஆண்டு வரையறையொடு நாள் வரையறை ஒன்றும் வேண்டுவது கட்டாயமாம்.

வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்னும் வழக்குக்கு இழுக்கும் உண்டோ என்னும் தாயுமானக் கொள்கை உலகம் ஒத்த பழநெறியாம். அதனாலேயே அவ்வக்கால வல்லார் வகுத்துத்தந்த ஆண்டு திங்கள் நாள் செய்தி என்பவற்றை அவ்வக்கால அரசும் ஆர்வலரும் வழிஞரும் ஏற்றுப் போற்றினர். அவையே இக்காலத்து நாம் ஏற்றுப் போற்றும் ஆண்டுமானமும் வரலாற்றுமானமும் ஆம். இவ்வகையில் **அறிஞர்களொடு ஆளுநவர்களும் ஒத்திணைந்து முழுப்பு எடுத்து நாடு ஏற்று நடைப்படுத்த வைத்தல் வழிவழி வழக்கம்.**

**வள்ளுவர் நாள்**

அவ்வழியே வழியாய்த் **தமிழ்நாட்டு அரசு, திருவள்ளுவர் ஆண்டினை ஏற்றது;** அவர் நாளினைத் தைத்திங்கள் இரண்டாம் நாளாக உறுதி செய்தது. தை முதல் நாளைத் தமிழர் ஆண்டுப் பிறப்பாகச் சட்டம் செய்தது. **இம்மரபு உலகொத்த மரபேயன்றி சுருக்க நோக்கினது அன்று.**

**தைச் சிறப்பு**

தமிழர் வாழ்வின் எதிர்பார்ப்பிலும் ஏற்றத்திலும் இயற்கை இயங்கியல் வழியிலும் **தைத்திங்கள் முதல் நாள், ஆண்டுத் தொடக்கம் என்பதற்கு மிகத்தகுவதாம்.** சித்திரையோ எரி நாள்; எரிமீன் வாட்டலும் கூடிய நாள். அதனினும் தைத் திங்கள் ஆண்டுப் பிறப்பாதல் சீரிதாம்.

"பங்குனி மாதம் பகல்வெளி நடந்த பாவத்தில் போவேனாகவும்" எனத் தற்சாவிப்புத் தரும் திங்களை அடுத்த எரி நாளில் தொடங்கும் புத்தாண்டிலும், நிலமகள் பூரித்துக் கலகல என நகைப்பது போல வளங்களை எல்லாம் வழங்கும் தைந் நாள் இயற்கை குலவிக்கொஞ்சுவதாம். அதனால் 'தைப்பிறந்தால் வழிபிறக்கும்' என்னும் வாழ்வியல் சுரப்பைத் தமிழுலகம் கண்டது; கொண்டு போற்றியது.

உழவன் ஏர்க்காலும் தார்க்கோலும் எடுத்து மாடு ஓட்டத் தொடங்கும்போது ஒலிக்கும் ஒலி தை, தை, தை, ஆடல் கலையின் அடியெடுத்து வைப்பே தை, தை தக்கா தை. துண்டானவற்றை இணைக்கும் இணைவு ஆணை தை. தொழில் தையல், தைத்தல் ஓரரிய கலை!

கன்னியர் கொள்ளும் கவின் நோன்பு தைந்நீராடல், பாவைப் பாட்டின் நிறைவு தைந்நீராட்டு!

அந்நீராட்டின் அருமையை அறிய வேண்டுமா? திருவெம்பாவை திருப்பாவையில் திளைக்க.

'தைஇத்திங்கள் தண்கயம்' என எத்தகு பாராட்டுப் பெறுகிறது. கயம் (ஆழ்நீர் நிலை) மற்றை நாளிலும் திங்களிலும் இல்லாததா அக்கயம்?

'தைஇத்திங்கள் தண்கயம்' என்கின்றன நற்றிணையும் (80); புறநானூறும் (70) 'தை இத் தண்கயம்' என்கிறது ஐங்குறு நூறு (84) பாரியின் பறம்புச் சுனைக்குப் பாடுபுகழ் பெரிது! அச்சுனைக்கு உவமையாகத் தைஇத்திங்கள் தண்ணிய நீரைக் குறிக்கிறது குறுந்தொகை (196) அது.

**"பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்**
**தைஇத் திங்கள் தண்ணிய"**

என்கிறது.

தைந்நீர் ஆடுவார் ஒருவரா? இருவரா? ஊரூர் ஊரூர் வாழ்நர் அனைவரும் ஆடுவர்.

**தைஇத்தண்கயம் போலப் பலர்படிந்து**

என்கிறது ஐங்குறு நூறு (84)

தையில் நீராடும் பேறு தவப்பேறு. அப்பேறு வாய்த்தல் அரிது. ஆதலால் தையில் நீராடிய தவம் தலைப்படுவாயோ? என்கிறது கலித்தொகை (59)

தைந் நீராட்டுப் பற்றிய பெரியபாட்டு பரிபாட்டு ஒன்று (11). அது, 'இன்ன பண்பின் நின் தைந்நீராடல்' என்கிறது. அதற்கு உரைகாரர். இத் தைந்நீராடலை முற்பிறப்பில் செய்த தவத்தாலே இப்பிறப்பிற் பெற்றேம். அதனை யாவரும் நயக்கத்தக்க நின்னீர்நிறைக் கண்ணே மறுபிறப்பினும் பெறுவேமாக என்கிறது.

முன்னை வாய்த்த நீரினும் தைந்நீரின் தெளிவு பெரிது தண்ணிதும் தெளிதலும் ஒருங்கே கொண்டது. அதனால், நீ தந்தாய் தைந்நீர் நிறந்தெளிந்தாய் என்கிறது அதே பரிபாடல் (11) இளங்குழந்தையர், இளஞ்செல்வியர், கன்னியர் நீராடல் மகிழ்வில் வரைகடந்தால் புாதுகாப்பு அரணம் வேண்டுமே அவர் எவர்?

**"தாய் அருகா நின்று தவத்தைந் நீராடுதல்"**

என்கிறது மேலைப் பரிபாடல்.

பராந்தக பாண்டியன் மெய்க்கீர்த்தி 'தைப்பூசப் பிற்றைஞான்று வந்திருந்தார் எல்லார்க்கும் தியாகமிட அறத்தால் விளங்கிய பாண்டியன்' என்கிறது. இயற்கை இயங்கியல் படி தைத்திங்கள் பிறப்புக்குத் தனிச்சிறப்பு உண்டு. அஃது என்ன வெனில் இமயத்துப் பனிப் பொழிவு முதல்

குமரிப் பனிநடுக்கம் வரை வருத்துவதற்கு மூலம் என்ன? அது கதிரின் தென்செலவு! அது முற்றுப் பெற்றுத் தைம்முதல் நாள் தொட்டு வடதிசைச் செலவு மேற்கொள்கின்றது. '**வெம்மை வேண்டல்**' என இன்பந்தரத் தொடங்குகின்ற பெருமையும் பெற்றிமையும் கொள்கின்றது. ஆதலால், குடியும் குடித்தனமும், தொழிலும் வளமும் ஓங்கிச் சிறக்க உதவும் தைத்திங்கள் முதல் நாள் தமிழர் ஆண்டுப் பிறப்பெனச் சிறக்கச் செய்தவர் எவ்வெவரும் போற்றுதற்குரியராம்.

தைந்நாள்! பொங்கல் நாள்! தமிழர் தனிப்பெருவிழா நாள் அது. அந்நாள் ஏறுதழுவுதல் விழா; இன்று வரை தொடரும் சான்று நாள்; உழவர் உழைப்பாளர் பட்ட பாட்டின் பயன் என விளங்கும் கூட்டமுத விழா பொங்கல்விழா!

**இது பழையதா? புதியதா?**

பொங்கல் வாழ்த்து விடுத்தல் புதுவது; முக்கால் நூற்றாண்டுப் புதுமையது தொடங்கியவர் கா.நமச்சிவாயர். பொங்கல் விழாவோ உழவன் தொடங்கிய உழவின் தொடக்கம் தொட்டது. வித்தியது விளைந்ததா? களம் வந்தது களஞ்சியம் சேர்ந்ததா? அவன் வாழ்வில் பூரிப்பு ஏற்பட்டது. அப்பூரிப்பின் அடையாளம் பொங்கல் விழா! அறுவடைத்திருவிழா!

பொங்கல் என்பதன் உணர்வுப் பொருள், மகிழ்ச்சி பொங்கும் கடலைக் கண்டவன், அருவி பூரித்துவிழும் இடத்திற்குப் பொங்கு மாகடல் என்றே பெயரிட்டான். பூத்துக் குலுங்கும் சோலைக்குப் பொங்கர் என்றே பெயரிட்டான். புது மழையைப் பொங்கல் மழை என்றான்.

அவன் கண்ட பொங்கல் ஒப்புரவுப் பொங்கல். அறுவடை ஆக்கம் அனைவரையும் அடைந்து, ஆடிப்பாடிக் கூடிக் குலவி மகிழவைக்கும் பொங்கல் ஆயிற்று. குழவியர் முதியவர் காளையர் கன்னியர் என அனைவரையும் புத்துடை

உடுத்திப் பொலிவோடு விளங்கச் செய்யும் விழா வாயிற்று. ஆடவர்க்கும் மகளிர்க்கும் கலை விழாக் கோலம் ஆயிற்று! தலைவிழாவாம் கோலமும் தமிழர்க்கு ஆக்கிற்று. **அந்நாளை ஆண்டுப்பிறப்பெனல் இந்நாளில் அதற்கு வாய்த்த முடிசூட்டுவிழா.** பொங்கலில் பால், அரிசி, பருப்பு வகை, பழவகை, இனிப்பு, ஏலம், கிராம்பு, சுக்கு, நெய் எனப் பலவும் இணைந்து பொங்கி, தன்தன் சுவையை விடாமல் பொதுவுக்குச் சுவையாக்கி ஒன்றற்கு ஒன்று சுவையாய் ஒப்புரவு ஆக்கும் படையல் விழா. பலப்பலரும் கூட்டுண்டு மகிழும் குடும்ப நல - நாட்டு நல விழா! அன்று எல்லார்க்கும் எல்லாம் என்னும் இனிய சூழலில் கதிரோனுக்கு எடுக்கும் பொதுமை விழா அது.

அப்பொங்கல் நாளை அடுத்த **நாள், மாட்டுப் பொங்கல்** நாள். **அது நன்றியறிதல் விழா!** ஆன்ம நேயம் பெருக்கு நாள். காட்டிலும் மேட்டிலும் உழைத்து, வீட்டிலும் வீதியிலும் வளம் சேர்த்ததும், அரிசியையும் மணிகளையும் பருப்புகளையும் தந்துவிட்டுத் தட்டை தாள், பொட்டு பொடி, தவிடு காடி என உண்டும் பருகியும் உழவனுக்கு உணவும், நிலத்துக்கு உரமும் தந்த காளைக்கும் எருதுக்கும், ஆவுக்கும் கன்றுக்கும் ஓய்வு தந்து பொங்கல் வளம் தந்து ஊர்மகிழ எடுக்கும் தேர்த்திருவிழா.

அவ்விழா நாள் - மாட்டுப் பொங்கல் நாள் - உழவு பாடிய தமிழ் உழவர் முதுபெருங்கிழவர் - முப்பால் கண்ட **பொய்யா மொழியார் நாளாக ஆக்கப்பட்டது பெருஞ்சால்பினதாம்.**

**தொல்காப்பியர் நாள்**

அதேபோல் **தமிழ்ப் பொங்கல் படைத்த தொல்லோன்** பழந்தமிழ் வளமெலாம் பாரறிய வைக்க ஒப்பிலா நூல் செய்த **ஒல்காப்புலமைத் தொல்காப்பியன்** விழாவாகத் தைம் முதல் நாளாம் பொங்கல்விழா நாளைத் **தொல்காப்பியன் விழா நாளாகவும்** உறுதிப்படுத்தி வழிவழி வழக்காக்கல் கடனாம்.

அது தமிழ் மொழியாம் கதிரோன் வழிபாட்டு நாளாகச் சிறக்க வழி செய்வதாம்.

> **"ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
> **ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்**
> **தன்னோர் தனியாழிச் செங்கதிரோன் றேனையது**
> **தன்னோர் இலாத தமிழ்"**

என்பது தமிழ் மொழிக் கதிர் வாழ்த்தாம்.

தமிழ் இயற்கையில் பிறந்து இயற்கை ஒலியால் சொல்லாகி இயற்கை வடிவாய் இயங்கித் தோன்று நாள் தொட்டு இன்றுவரை இயங்கிவரும் செவ்வியல் செம்மொழி. **செந்தமிழ் என்னும் பெயரீடு தற்கிழமையாய்க் கொண்டது.**

**சான்றோர் நாள்**

செம்மைவேறு தமிழ் வேறு எனப் பிரிக்கக் **கூடாமல்** அமைந்தது. செஞ்ஞாயிறு செந்தாமரை போல அச்செவ்வியல் பேறு தொல்காப்பியர் திருவள்ளுவர் என்னும் இருவர் அளவில் அமைந்தது இல்லை. **சங்கச் சான்றோர் பிற்காலச் சான்றோர்** என எத்தனைபேர்? **இச்சான்றோர் நாளாகத் தைத்திங்கள் மூன்றாம் நாளை அமைத்தல் சிறப்பாம்.**

**சுறவமாம் தை முதல் நாள் தொல்காப்பியர் நாள்**
**இரண்டாம் நாள் திருவள்ளுவர் நாள்**
**மூன்றாம் நாள் சான்றோர் நாள்**

என நிரலே முறைப்படுத்துதல் நேரிய சீரிய முழுமைத் தமிழ் நெறியாம்.

**வாழ்த்து**

இனித் தைத்திங்கள் முதல் மூன்று நாளுக்கும் வாழ்த்துவேண்டுமோ? வேண்டும் எனின், ஐங்குறுநூறு **முதல்பத்து** நோக்குக.

"வாழி ஆதன் வாழி அவினி"
எனவேட் டோளே யாயே

*என்னும் அப்பத்தின் வாழ்த்துகளுள் சில வருவன:*

**நெற்பல பொலிக! பொன் பெரிது சிறக்க! -1**
**விளைக வயலே! வருக இரவலர் -2**
**பால்பல ஊறுக! பகடுபல சிறக்க - 3**
**பசிஇல் லாகுக! பிணிசேண் நீங்குக - 5**
**அறம் நனி சிறக்க! அல்லது கெடுக - 7**
**அரசு முறை செய்க! களவு இல்லாகுக - 8**
**நன்று பெரிது சிறக்க! தீது இல்லாகுக - 9**
**மாரி வாய்க்க! வளம் நனி சிறக்க - 10**

*என்றும் வேண்டத்தக்க வாழ்த்துகள் இல்லையா இவை?*

*இன்னும் கிடைத்தற்கு அரிய ஒரு வாழ்த்து;* **தகடூர் யாத்திரை** *தருவது.* **நாட்டை வாழ்த்தும் அவ்வாழ்த்து, ஏட்டுக்கும் எழுத்துக்கும் மட்டும் எழிலாய் அமைந்தது இல்லை!** *நாடே ஒருமித்து நின்று இயற்கையைக் காத்து எஞ்சா வளங்களையெல்லாம் இயல்பாகப் பெற்று எல்லா உயிரும் இனிது வாழ வாழ்த்தும் வாழ்த்துப் பெட்டகமாம்!*

*அகன்று விரிந்த நாடு பெருகிவரும் நீரால் சிறப்பதாக! நிலத்தில் விதைக்கப்பட்ட விதை குறையாமல் முளைப்பதாக! முளைத்த வித்து முட்டுப்பாடு இல்லாமல் வளர மழைபொழிவதாக! பொழிந்த பின்னர்ப் பயிர் பக்கம் விரிந்து கிளைப்பதாக! அக்கிளைகள் எல்லாம் பால்பிடித்துத் தலைசாய்த்துக் கதிர்கள் மணிகள் கொள்வதாக! அக்களத்தில் நெற்குவியல்கள் காவல் இன்றிக்கிடப்பதாக! களப்பணிகளால் உழவர் மகிழ்வொலி என்றும் நிறைவதாக!*

*இவ்வாழ்த்தைக் கூறும் பாடல்,*

பெருநீரால் வாரி சிறக்க; இருநிலத்து
இட்டவித்து எஞ்சாமை நாறுக; நாறார
முட்டாது வந்து மழைபெய்க; பெய்தபின்
ஒட்டாது வந்து கிளைபயில்க; அக்கிளை
பால்வார்பு இறைஞ்சிக் கதிர் ஈன; அக்கதிர்
ஏர்கெழு செல்வர் களம்நிறைக; அக்களத்துப்
போர்எலாம் காவாது வைகுக; போரின்
உருகெழும் ஓதை வெரீஇப் பெடையொடு
நாரை இரியும் விளைவயல்
யாணர்த் தாகஅவன் அகன்தலை நாடே (9)

என்பது.

*மாடிக்குஏற ஏணி; மலைக்கு ஏறப் படிக்கட்டு; வாழ்வில் ஏற நூல் ஏணி! நாடு வாழ இயற்கைக் கொடைவளமாம் இவ்வாழ்த்து ஏணி! இவ்ஏணியைத் தந்தவன் எவனோ, தன் பாடலைப் புகழேணியில் வைத்துவிட்டுத்தான் அதனோடு அவனாய் அமைந்து விட்டான்.*

**முடிபு**

*இவ்வாய்வின் சுருக்கமும் முடிபும் வருமாறு. ஆசிரியர் தொல்காப்பியர் காலத்தை அறுதியிட அதன் பழமை பெருந்துணை. வாய்த்த தமிழ்ப் பரப்பில் உள்ள எவற்றுக்கும் பிற்பட்டதாகாப் பெருமையது என்பதைத் தானே நிலைப்படுத்திக் கொள்ளும் தகவினைக் கொண்டுளது. அதில் வாய்க்கும் அகச்சான்றுகளுள் தலைப்பட்டது பனம்பாரனார் இயற்றிய பாயிரம். அதில் உள்ள நாட்டு எல்லைக்குறிப்பும் ஐந்திரக்குறிப்பும் அருமை வாய்ந்தவை.*

*மற்றைப்புறச் சான்றுகளுள் கயவாகு காலம், கடல்கோள் காலங்கள், யவனர் பற்றிய குறிப்புகள், அருகர் புத்தர் காலங்கள் என்பன சுட்டத்தக்கன.*

*இவற்றைக்கொண்டு, இக்கணிப்புக்கும் கீழெல்லை இருக்கமுடியாது என்னும் வகையில், தொல்காப்பியர் காலம் கி.மு.590 தொடங்கி கி.மு.504 முடியக் கொள்ளலாம் என்று செய்யப்பட்ட முடிவாகும். இயல்பாகப் புலவர் அவையம் திருவள்ளுவர் காலம் கி.மு.31 என்று முடிபு செய்ததைத் தமிழ்நாட்டு அரசு ஏற்று அந்நாளை ஆவணப்படுத்தியது. தைத்திங்கள் இரண்டாம் நாளைத் திருவள்ளுவர் நாளாகவும் அரசு ஏற்றுப் போற்றியது. அவ்வகையில் தைத்திங்கள் முதல் நாளைத் தமிழர் புத்தாண்டுப் பிறப்பு நாளாகவும் சட்டம் நிறைவேற்றியது. அப்புத்தாண்டு நாளை - தைத்திங்கள் முதல் நாளைத் - தமிழினப் பொங்கல் கொடையாக வழங்கிய* **தொல்காப்பியர் நாளாக அரசு ஏற்றுப்போற்றுதல் வேண்டும்.**

*தமிழ், செம்மொழி என்னும் சீர்த்திபெற இயல்பாக வாய்த்தகொடையாளர்* ***சங்கச் சான்றோர்*** *நாளைத் தைத்திங்கள் மூன்றாம் நாளாக்கி மூன்று நாள்களையும் தமிழ்வள நாள்கள் ஆக்க வேண்டும் என்பது இந்த ஆய்வின் சுருக்கமும் முடிபும் ஆம்!*

**இன்பமே சூழ்க! நலமே மல்குக!**
**வாழிய நலனே! வாழிய நிலனே!**

# தமிழ் நெறி காத்த தமிழ்க் காவலர் தொல்காப்பியர்

தொல்காப்பியர் **சமண சமயத்தவர்** என்னும் பதிவு சிலர் நூல்களில் உள்ளது. திருவள்ளுவரையும் சமணர் எனக் கொள்வார் உளர். இவ்விருவருள் முதலாமவர் சமண சமயத்தவர் தாமா என்பதைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையாம்.

**சமயம், மதம்**

சமயம் என்னும் சொல்லோ மதம் என்னும் சொல்லோ தொல்காப்பியத்தில் இடம் பெறவில்லை. சங்கப்பாட்டு, தொகை, திருக்குறள் என்பவற்றிலும் இடம் பெறவில்லை. இச்சொற்கள் இடம்பெற்றது மணிமேகலை நூல் தொட்டே ஆகும்.

**சமணர்**

தொல்காப்பிய ஆசிரியர் ஜைன சமயத்தைச் சார்ந்தவர் என்பதை யாவரும் அறிவர் என்று உறுதிப்படுத்துகிறார். வர்த்தமானன் பதிப்பக நிறுவனர் பேரா. சீர்சந்திரனார் (சைன தத்துவமும் பஞ்ச பரமேட்டிகளும் பக்.4) இக்கருத்துடைய ஆய்வாளர் சிலர்! தொல்காப்பியர் நாளில் வர்த்தமான மகாவீரர் பிறந்தார் அல்லர். ஆயினும் அச்சமயப் பெருமக்கள் இருபத்தொருவர் கூறப்படுகின்றனர். அக்காலத்தே சமணம் தமிழகத்தில் புகவில்லை! வர்த்தமானருக்குப் பின்னரே சமணம் பரப்பப்பட்டது.

சமணர்கள் - அமணர்கள் தமிழகத்தில் மதுரைப் பகுதியில் மிகப்பலர் மலைவாணராக வாழ்ந்துளர். சமணர் மலை, நாகமலை, ஆனைமலை என்பவை அவர்கள் வாழ்விடமாக இருந்துள. மதுரையில் ஒரு தமிழ்ச்சங்கம் தோன்றியது. அதன் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டு. அதனை நிறுவியர் வச்சிரநந்தி என்பார்.

**சமணர் தொண்டு**

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் வரலாற்றை நோக்கின் சமணர் தமிழ்ச் சமயத்தாரால் வெறுத்து ஒதுக்கப்பட்டமை புலப்படும். வேதியமோ வன்மையாகச் சமணத்தை முட்டியது. வேதியத்தைத் தழுவிய சைவமும் சமணத்தை எதிர்த்தது. சமணச் சான்றோர் சிலப்பதிகாரம், சூளாமணி, பெருங்கதை, திருநூல் இன்னவும் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, நன்னூல் முதலியவும் இயற்றினர். அவர்கள் செய்த தமிழ்த் தொண்டு கி.பி. இரண்டாம் நூற்றாண்டு தொட்டு ஏற்பட்டவையே.

**ஐந்திரம்**

இந்நிலையில் ஐந்திரம் உணர்ந்த தொல்காப்பியர் அருகராம் வர்த்தமானர்க்கு முற்பட்டவராம். விண்ணவர் கோமான் விழு நூல் கற்றவர் மகாவீரர் என்பது வரலாறு. ஐந்திரம் கி.மு. நான்காம் நூற்றாண்டளவில் வழக்கற்றதாகிப் பாணினியமே பயில வழங்குதல் அறியப்படுகின்றது. பாணினிக்கு முற்பட்டவர் தொல்காப்பியர். ஆதலால் காலக்கணிப்பின்படி அவர் சமணர் அல்லர்; அந்நாள் மகாவீரர் தோன்றினார் அல்லர். அவர்க்கு முன்னவர்களோ பெயர் அளவில் தொடராக அறியப்படுபவர்களேயாம்! அது சமணர் வரலாறே அன்றித் தமிழர் வரலாறு அன்றாம்.

## சமண நூன் மரபு

இனிச் சமண சமயத்தார் நூன்மரபு, முக்குடை, பிண்டி, அச்சுதன் என்பன இல்லாமல் இயல்வது இல்லை. இவை தொல்காப்பியத்தில் இல்லை. சமய அழுத்தம் உடைய ஒருவர், இலக்கணமாயினும் சரி, இலக்கியமாயினும் சரி, இயற்றுங்கால் அவர்தம் வழிபாட்டு நெறி, கொள்கைக் குறி இல்லாமல் இருப்பது இல்லை. தூய தமிழ்ப் பெயராக இருப்பதும் இல்லை. 'இளங்கோ' இளவரசப் பெயரேயன்றி சமயப் பெயரன்று. அவர் தமிழ்ச் சமணராக விளங்கியவர். நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன் என்பார் பெயர்களோடு எண்ணின் விளக்கமாம். அத்தகையவரே கொங்குவேள் முதலிய சிலர்.

## தமிழ் மரபு

பழமையான தமிழ் மரபுகளைக் காக்க நூல் செய்த தொல்காப்பியர் தமிழ் நெறியராகவும், தமிழ் மீக்கூர்ந்த பற்றுமையும், காவல் கடனும் பூண்டவராகவும் இருந்தமையால், அவர் அயல் நெறியர் ஆகார்!

அவர் வடவெழுத் தொரீஇ, வடசொற்கிளவியைத் தமிழ் மரபில் எழுத வேண்டும் என்று ஆணையிடுவது கொண்டே, அவர் வேத வழியர் அல்லர் என்பது போல், சமண நெறியர் அல்லர் என்பதும் தெளிவாம். ஏனெனில், வேற்றுச் சொல்லும், வேற்று எழுத்துத் தழுவலும் சைவம், வைணவம் முதலிய பெயர்களாலேயே புலப்படும்! சமணம் பௌத்தம் என்பனவும் விலக்கன்று! தமிழர் சமயமாகிய சிவநெறியும் மால்நெறியும் வடசொல் மாலையை ஏற்று மயங்கிக் கிடந்தமையும் இன்னும் மீளா அடிமை நிலையில் கிடப்பதும் அறிந்தால் சமய வாணர் நிலை புலப்படும்.

**வினைக் கொள்கை**

வினைக் கொள்கை அருக சமயத்தாரின் முத்திரை போல்வது. ஊழ் எனப்படும் உலகத்து இயற்கையையே 'ஊழ்வினை' எனத் தடமாற்றியது அருக சமயமேயாகும். ஊழ்வினை என்னும் சொல் தொல்காப்பியம், திருக்குறள், பாட்டு, தொகை ஆகிய இருபது நூல்களிலும் ஓரிடத்துத்தானும் இடம் பெறவில்லை. முதற்கண் ஊழ்வினை இடம் பெற்றது சிலப்பதிகாரத்தில் தான். அஃது அடிகளார் மேற்கொண்ட அருக சமயச் சார்பு வழிப்பட்டது.

**அறிவுக் கொள்கை**

இனிச் சமண சமய அடிப்படைக் கோட்பாட்டில் ஓரறிவு முதல் ஐயறிவு வரை வரம்புபடுத்தப்பட்டதை அன்றி, ஐந்தன் மேல் ஏறிய மன அறிவாம் ஆறாம் அறிவுக்கு இடமில்லை.

"ஓர் அறிவு ஆதியா உயிர் ஐந் தாகும்"

என்றும் (நன். 444)

"வானவர் மக்கள் நரகர் விலங்குபுள்
ஆதி செவி அறிவோடு ஐயறி வுயிரே"

என்றும் (நன். 449) சமணப் பவணந்தியார் இயற்றிய நூல் கூறுகிறது.

தொல்காப்பியரோ,

"மக்கள் தாமே ஆறறி வுயிரே"

என்கிறார்.

## தொல்காப்பியர் - கடவுட் கொள்கை

இனித் தொல்காப்பியர், நானிலங்களுக்கும் மாயோன், சேயோன், வேந்தன், வண்ணன் என்னும் தெய்வங்களையும். "தெய்வம் உணாவே மாமரம்புள்" என்னும் கருப்பொருளையும் வைக்கிறார்.

'கடவுள் வாழ்த்து' என்பது குறித்துத் தொல்காப்பியர்

"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" (1034)

என்று கூறுகிறார். கடவுட் கோட்பாடு அருகநெறியர் கொள்வது அன்று.

இவ்வாறு அடிமூலக் கொள்கைகளிலேயே அருக நெறிக்கும் தொல்காப்பியத் தமிழ் நெறிக்கும் வேறுபாடு உண்மையை உணர்வார் தொல்காப்பியரை அருகர் எனச் சொல்லார். அவர் சைவர், வைணவர் எனவும் சொல்லார். ஏனெனில், அவர் நாளில் இச்சமயங்கள் தோன்றின அல்ல. சிவனார் வழிபாடும், திருமாலார் வழிபாடும், அம்மை வழிபாடும் தொன்மையன என்பது அறியச் சான்றுகள் பலப்பல உண்டாயினும், அவ்வழிபாடுகள் சமயப் பெயர் பெற்றவை அல்ல! மெய்கண்டார் தோற்றத்தின் பின்னரே சிவனிய மெய்ப்பொருள் நூல் வாய்க்கின்றது. மெய்கண்ட பரம்பரையும் உண்டாகின்றது. தொல்காப்பியம், திருக்குறள், சங்க இலக்கியம், இறையருட் செல்வர்கள் படைப்பு ஆயவை கொண்டு வகுக்கப்பட்டதே சைவ சமயம் ஆயிற்றாம், அதன் பொருள் நூல் - முதல் நூல் - சிவஞான போதமேயாம்.

### தமிழர் சமயம்

சமணம் தமிழகச் சமயமன்று; தமிழர்களால் ஏற்கப்பட்டும், பங்களிப்புச் செய்யப்பட்டும் இருப்பினும் தமிழகத்துக் கிளர்ந்த தமிழர் சமயமன்று. பாகத மொழி வழியது அது. வடமொழி வரவுக்கு முற்பட்டதேனும், அதற்குக் கொண்டும் கொடுத்தும் தழுவிக் கொண்டது. அதன் சமயச் சொற்களே தமிழுக்குரிய தல்லாத அயற்சமய நெறியது என்பதைக் காட்டுவனவாம்.

தமிழர் சமயங்களும் கூடத் தம் மெய்யியற் சொற்களை அயன்மொழி வழியே ஆக்கியும் ஆக்க இடந்தந்தும் இன்றும் முற்றாக விலக்க முடியா நிலையில் இருப்பதும் வடமொழியே வழிபாட்டு மொழி, தெய்வ மொழி என்பதற்கு ஒரு காரணமாம்.

### வழக்கு

தொல்காப்பியம் அயல்வழக்குத் தழுவாத் தமிழ் வழக்குடையது என்பது தொடக்க முதல் இறுவாய் வரை கடைப்பிடியாகக் கொண்டு இயற்றப்பட்டமையால் தான் தொல்காப்பியப் பாயிரம் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து, வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி என்ற அளவில் அமையாமல் "செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்தோன்" என்றும் அழுத்தமாகக் கூறியது.

"கரணத்தின் அமைந்து முடிந்த காலை" (5)

என்னும் கற்பியல் நூற்பாவை வடவர் நெறிக்கு வலிந்து இழுத்துச் சென்று, தமிழ்ப்பரப்பில் அந்நெறிக்குச் சான்று

காணாராய்த் தமிழ் நெறிக்கரணத்தையே எடுத்துக் காட்டும் நச்சினார்க்கினியர்,

"காலம் உலகம் உயிரே உடம்பே" (58)

என்னும் கிளவியாக்க நூற்பாவுக்கு உரையெழுதுங்கால்,

"காலம் உலகம் என்பன வடசொல் அன்று; **ஆசிரியர் வட சொற்களை எடுத்தோதி இலக்கணம் கூறார் ஆகலின்**" என, தேர்ந்த தெளிவுரை வழங்குதல் கொண்டு தொல்காப்பியத் தமிழ்ம்மை விளக்கமாம்.

**இன்மைக் கொள்கை**

வேதங்களையும் அவற்றைத் தழுவியவரையும் எதிர்த்த மதங்களுள் குறிப்பிடத்தக்கவை. **சார்வாகம், சைனம், பௌத்தம்** என்பன. இம்மதத்தார், ஒரு தனிக்கடவுளையோ அக்கடவுளின் ஏற்றத்தையோ நம்பாதவர்கள். மேலும், வேதங்கள் கூறும் சமயச் சடங்குகள் மக்களை உய்விக்கமாட்டா என்பவர்கள் என்பர். (தமிழகத்தில் ஆசீவகர்கள் பக். 6)

**அணுக்கொள்கை**

சார்வாக மதத்தார் ஆசீவகர் எனப்படுவர். ஆசீவகர், சமணர், பௌத்தர் ஆகிய மூவரும் அணுக்கொள்கையர், உலகப் பொருள்கள் அனைத்தும் அணுக்களால் ஆனவை என்பர். அணுக்களுக்கு அழிவு இல்லை; தோற்றமும் இல்லை என்பர். அவ்வணுத்திரளே 'ஒலி' என்பது அவர்கள் கொள்கை. ஆதலால் பவணந்தியாராகிய சமணர் இயற்றிய நன்னூலில்,

"மொழி முதற் காரணமாம் அணுத்திரள் ஒலி
எழுத்தது முதல் சார்பு என இரு வகைத்தே"

என்கிறார். இவ்வணுக் கொள்கையராகவோ, குருவர் வழிபாட்டுக் கொள்கையராகவோ தொல்காப்பியரைச் சுட்டல் இயலாது.

"பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த
நான்முகற் றொழுது நன் கியம்புவன் எழுத்தே"

என்று தொடங்குவது போலவோ, மொழிமுதற் காரணம் அணுத் திரள் ஒலி என்றோ கூறினார் அல்லர்.

நூல் தொடக்கமே,
"எழுத்தெனப் படுப
அகர முதல னகர இறுவாய்
முப்ப ஃ தென்ப;
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே"

என்பதாம். ஆதலால் அணுக் கொள்கைச் சமயத்தர் எனின், அதனைக் கூறியிருப்பார். அன்றியும் தொல்காப்பியத்தில் 'அணு' என்னும் சொல்லே இடம் பெறவில்லை.

உலக மூலமாம் ஐம்பூத மயக்கத்தை,

நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்

என்ற அவர், ஐந்து பூத மூலமாம் அணுவைச் சுட்டினார் அல்லர்.

சமணர் ஏற்காத கடவுள், தெய்வம் ஆகிய சொற்களையும் கூறுகிறார். ஆதலால், தொல்காப்பியர் சமணர் ஆகார்.

## நிலையாமைக் கொள்கை

நிலையாமைக் கொள்கையில் மிக அழுத்தம் உடையவர் சமணர். தமிழ் நெறியாம் காஞ்சித் திணையின் இலக்கணத்தை,

> "பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்
> நில்லா உலகம் புல்லிய நெறித்தே"

என்கிறது. அவர் கூறும் மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை முதல் காடு வாழ்த்து ஈறாக இருபாற்பட வகுத்த இருபது துறைகளும், அமர நிலையே; அஃது அழுகை நிலை அற்ற வீறு மிக்கவையாம்!

## அகத்திணை

அகத்திணை புறத்திணை என்பவை தமிழர் பொருள் நெறி கூறுவன. இப்பொருள்கள் இரண்டனுள் தொல்காப்பியர் அகத்திணைக்கே முன்மை கொடுத்ததுடன் களவியல், கற்பியல், பொருளியல் என மூன்று இயல்களை மேலும் வகுக்கிறார். புறத்திணை அத்தகு விரிவு பெற்றிலது. அவர் யாத்த முறையே முறையாய் பாட்டு தொகை நூல்களில் அகத்திணை மிக்கும் புறத்திணை சுருங்கியுமே உள்ளமை தமிழ் கற்றார் எவரும் அறிந்தது. தமிழ் என்பதே 'அகப்பொருள்' என்றும் 'களவியல்' என்றும் பெருமையொடு கூறல் நூன் மரபு ஆகியது. எழுத்து சொல் பெற்றும், பொருள் பெறாமை மற்றவை பெற்றிலேம் எனப் பாண்டிவேந்தன் கவல வாய்க்கப் பெற்றதாகக் கூறப்படும் பொருள் இறையனார் களவியலேயாம். அது என்ன கூறிற்று எனின் 'தமிழ் கூறிற்று' என்பது மறுமொழி. (விடை) ஆரிய மன்னன் பிரகத்தனுக்குத் 'தமிழ் அறிவிக்கக்' கபிலர் பாடிய நூல் குறிஞ்சிப்பாட்டு!

குறிஞ்சியாவது புணர்தலும் புணர்தல் நிமித்தமும் ஆம்! இவை மற்றை மொழியரும் சமயத்தரும் காணாத தமிழ் நெறியவையாம். பொருள் இலக்கணம் என்பது தமிழர் வாழ்வியல் இலக்கணம் என்பது தேர்ந்து தெளிந்த முடிபு.

**புறத்திணை**

போர் வேண்டாப் பொறுமை நெறி, ஐம்புலன் ஐம்பொறி வெல்லும் வீரமே வீரம் என்பவை சமண நெறி வர்த்தமான மகாவீரர் சிறப்பே புலனைந்தும் வென்ற வெற்றியர் என்பதாம். இனி அகப் பொருளோ சமணர் பாராட்டும் சிறப்புப் பொருளன்று. ஆதலால், தொல்காப்பியர் சமண சமயத்தர் அல்லர் என்பது வெளிப்படை.

**மகளிர்**

இனி மகளிர்க்கு வீடுபேறு இல்லை என்பது சமணக் கொள்கை. பிற இனத்தரினும் சமணப் பெண்டிர் கற்று வல்லாராய் புலமை மிக்காராய் இருப்பினும் ஆடவர்க்கொப்ப மதிக்கப்படுவது இல்லை. ஆனால் தொல்காப்பியர் சொல்லும் கிழவன் கிழத்தி, தலைவன் தலைவி, இல்லறம், துறவு என்பவை தனிப் பெருஞ்சிறப்பின.

**துறவு**

இல்லறத்தை மேற்கொண்டு துய்ப்பன துய்த்து மக்களைப் பெற்று அவர்களைத் தக்கவர்கள் ஆக்கி, சுற்றத்தார் சுற்றப்பட அறநெறியாளராய் வாழ வழிகாட்டி வாழ்வின் நிறைவில் மக்கள் சுற்றம் பாராட்டத் தக்க வகையில், பெற்ற பெருமையர் ஆகிய அவர்கள் நிறை கடன் செய்த நேயமிக்காராய்த் துறவு மேற்கொள்வர். தனித்துறவு பற்றித்

தொல்காப்பியர் சொன்னார் அல்லர். ஆதலால் இல்லற மாளிகையின் மேல் எடுக்கப்பட்ட மாடி தமிழர் துறவாம்!

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்பது அந்நூற்பா (கற்பியல். 51)

இதனால் ஆடவர் எனினும் மகளிர் எனினும் தவம் புரிதற்கும் வீடு பேறு பெறுவதற்கும் ஒத்த உரிமையரே என்பது தமிழ்த் 'தொல்காப்பிய நெறி' என்பது விளங்கும்.

**காமம்**

இசையும் நாடகமும் காமத்தை வளர்க்கும்; ஆதலால் அவற்றைக் கடிதல் (விலக்குதல்) சால்பு எனக் கொண்டவர் சமணர் என்றும், அக்கொள்கையால் இசையும் கூத்தும், அவற்றின் நூல்களும் இறந்தொழிந்தன என்றும் கூறுவர். ஆனால், அக்கொள்கை தமிழிலக்கியக் கலை உலகில் ஏற்கக் கூடுவதாகத் தோன்றவில்லை.

முதல் காப்பியமாம் சிலம்பு செய்துள்ள 'கலைமணம்' 'ஒன்றா இரண்டா? இசை, இசைக்கருவி, அரங்கம், ஆடல் திறம், வரிப்பாடல்கள் கொள்ளை கொள்ளையாய் இல்லையா?

சிந்தாமணிக் காப்பியத்தில் யாழ் முதல் எத்தனை கலைகள்?

பெருங்கதையும் தான் என்ன, கலையில் கடல் அல்லவோ?

சமணர்கள் தங்கிய குகைகள் சிற்பக் கூடங்களும், ஓவியக் கூடங்களும் அல்லவோ!

சமண சமயத்தார் அகப்பொருளாகிய காதல் பற்றிப் பாடும் திறம் இல்லார் எனப் புலமையர் புகலத் திருத்தக்க தேவர் சிந்தாமணியை மணக்காப்பியமாகவே பாடினார் என்பதன் உள்ளீடு கருதத் தக்கது.

மேலும் அவர் ஆசிரியர் அச்சணந்தியார், காப்பியம் பாடும் திறம் தம் மாணவர்க்கு உண்டா என அறிந்து கொள்ள, ஓடும் நரியொன்றைக் காட்டி அதைப் 'பாடிவா' என ஏவப் பாடப்பட்ட நரி விருத்தம் முற்றாக நிலையாமையை வலியுறுத்துவதே என்பதை அறிந்து கொள்ளல் தெளிவாம். சமணர் இயற்றிய நூல் எனப்படும் நாலடியாரில் உள்ள இன்பத்துப்பால் அல்லது காமத்துப்பால் அப்பாலா, கழிசடைப்பாலா என்பதே வினாவாக எழும், சூடிக் கழித்த மலரன்ன இழிமைய நிலைகளையுடையவை. பட்டினத்தார் பெயரால் இட்டுக் கட்டி இடையே சேர்க்கப்பட்ட மகளிர் இழிமைக்கு முன் வரவு நாலடிக் காமத்துப்பால்

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வருஉம் மேவற் றாகும்
(பொருள் இயல் 29)

என்னும் தொல்காப்பியரா சமணர்?

**கலைக்கொள்கை**

கலையாட்டத்தால் வந்தது தானே கோவலன்
நிலையாட்டம்?

கலைப்பிரிவின் விளைவு தானே கோவலன் கொலைப்
பிரிவு மூலம்?

"காதற் கணிகையின் கடற்கரைப் பாடல் கனக விசயர்
கதிர்த்தலை முடியை நெரித்தது என்று
மாடலன் சொல்லியவாறு, அவ்வளவோடா முடிந்தது?
எத்தனை சாவுகள்! அழிபாடுகள்!"

கலை கலைக்காக அன்றிப் பிறரை வெல்லும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டமையே சமண சமயக் கலைக் கொள்கை எனப் புலப்படல் அறியலாம்.

முத்தமிழ் நோக்கு அன்னது அன்று என்க.

தொல்காப்பியர் மாந்தர் உளவியல் கலையியல் இன்பியல் துன்பியல் மேலும் எண்ணும் பல்லபல இயல்களின் உயிர் நாடியாம் மெய்ப்பாட்டியலைக் கற்ற ஒருவர், அவ்வியலைப் படைத்தாரைச் சமணர் என எவ்வகையாலும் கொள்ளார்!

**சுருக்கல் வேண்டா**

ஒருவர் - அரிய பெரிய உரையாசிரியர், நச்சினார்க்கினியர், சமதக்கினியார் மகனார் திரண தூமாக் கினியாரே தொல்காப்பியர் என நெடுஞ்சரடு விட்டார்! இல்லாத அகத்தியரின் பொல்லாத மாணவராகவும் காட்டினார்! தொல்காப்பியரை வேத வழியர் ஆக்குவதிலே அவ்வளவு காதல்! அது போல் தொல்காப்பியரைச் சமணர் ஆக்குதல் வேண்டா! தமிழ் நெறி சிதையாமல் காக்கும் வகையில் இலக்கணம் இயற்றிய தமிழ் நெறித் தமிழர் தொல்காப்பியர் என்பதே ஆய்வுக்கும் ஆய்வர்க்கும் சால்பாம்! எச்சமயத்தினும் மேம்பட்டது மொழி இன நெறியாகும்! அந்நெறியைச் சுருக்கி விடல் ஆக்கச் செயலன்று என்க!

**தமிழ் அறம்**

இனித் தொல்காப்பியரைத் தன் சமயத்தவர் என்பதால் சமணம் பெறற்குள்ள பெருமை எதுவும் இல்லை. ஏனெனில் அதற்கும் சமணமதக் கோட்பாட்டுக்கும் தொடர்பு இல்லாத - ஏன் - மறுதலையும் பட்ட - நூலால் அது பெறும் பேறுதான் என்னவாக இருக்க முடியும்!

தொல்காப்பியர் சமணர் அல்லர் என்பதால் தமிழிலக்கணம் கற்பார்க்குக் குறைவாவதும் எதுவும் இல்லை. தொல்காப்பியர் தொல்காப்பியராகவே இருக்க விடுவதே அருக அறமும் தமிழ அறமுமாம்.

✧✧✧



**திருவள்ளுவர் காலத்தை** அறிஞர்கள் தம் ஆய்வின் வழியே காட்டினர். அரசு, அந்நாளை ஏற்றுப்போற்றி நிலை நாட்டியது. அவ்வாறே, **தொல்காப்பியர் காலமும்** தீர்மானிக்கப்பட வேண்டிய கட்டாயம் உடையது. அவர் காலத்தைப் பல்வேறு அறிஞர்கள் சுட்டிச் சென்றுள்ளர். இந்நாளிலும் ஆய்கின்றனர். **"ஒரு முடிபு செய்யப்பட வேண்டும்"**. அதற்கு மேற்கொள்ளப் பட்ட ஆய்வு இஃதாம்! இங்குக் காட்டப்பட்ட சான்றுகளின் மேலும், வலுவாய சான்று காட்டி நிறுவினால், அவ்வாறு நிறுவுவார் கொள்ளும் மகிழ்வினும் நிறை மகிழ்வு எளியேன் கொள்வேன். அம் முயற்சி பெருகி நன் முடிபொன்று வாய்க்குமாக!